# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 13 வள்ளுவர் ஆண்டு 2029 ஆவணி 23 செவ்வாய்க்கிழமை (08-09-1998) UTHAYAN A Lively National Tamil Daily சுடர்: 243


## மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிரதிநிதிகளாக தமிழர்கள்

யாழ்ப்பாணம், செப். 8

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். பிராந்திய செயலகத்தில் ஆணைக்குழுப் பிரதிநிதிகளாகச் செயற்படும் பொறுப்பு முற்று முழுதாகத் தமிழர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது.

யாழ். பிராந்திய இணைப்பாளராக இதுவரை செயற்பட்டு வந்த சேனகா பி. திஸநாயக்கா தனது முன்னைய பணி இடமான பதுளைக்கும் —

விசாரணை அதிகாரியாக இதுவரை கடமையாற்றிய நுவான் சந்திரசேகரா தனது முன்னைய பணி இடமான வவுனியாவுக்கும் —

மனித உரிமைகள் ஆணைக் குழுவினால் திருப்பி அழைக்கப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தின் முன்னாள் மேலதிகப் பதிவாளர் போமன், சட்டத்தரணி ஜீவேஸ்வான், சண்முகநாதன் ஸ்ரீதரன் ஆகிய மூன்று தமிழ்ப் பிரதிநிதிகளுமே மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். செயலகத்தில் பொறுப்பான அதிகாரிகளாக இனிமேல் செயற்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

## சந்தேகத்துக்கிடமான வீடு வவுனியாவில் முற்றுகை!

### விலங்குடன் இளைஞர் மீட்பு

கொழும்பு, செப். 8

வவுனியாப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் சங்கிலியால் பிணைக்கப்பட்ட நிலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவரை பொலீஸ் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் மீட்டுள்ளதாக ஏஜென்ஸி செய்தி ஒன்று தெரிவித்தது.

சந்தேகத்துக்கிடமான அந்த வீட்டை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் நேற்றுத் திடீரென முற்றுகையிட்டுச் சோதனை நடத்திய போதே அந்த இளைஞர் மீட்கப்பட்டார் என்றும் —

அவரை விசாரணை செய்த போது தன்னுடன் மேலும் 35 பேர் அந்த வீட்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் பின்னர் அவர்கள் அங்கிருந்து வேறு ஓர் இடத்துக்குக் கொண்டு செல்லப்பட்டனர் எனவும் அந்த இளைஞர் கூறியதாகவும் —

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக மேலதிக விவரங்கள் உடனடியாகக் கிடைக்கவில்லை. (ஐ-9)

## மட்டு. நகர் மத்தியில் பார்சல் குண்டு மீட்பு!

மட்டக்களப்பு, செப். 8

மட்டக்களப்பு நகரின் மத்தியில் நேற்று மாலை 6.15 மணியளவில் சக்தி வாய்ந்த பார்சல் குண்டு ஒன்று இராணுவத்தினரால் மீட்கப்பட்டது.

வர்த்தக நிலையம் ஒன்றின் வெளிச்சுவர் ஓரமாக சந்தேகத்துக்கிடமான முறையில் கிடந்த பார்சலிலேயே இக்குண்டு காணப்பட்டது.

இராணுவத்தின் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினர் உடனடியாக விரைந்து வந்து குண்டைச் செயலிழக்கச் செய்தனர். (ஐ-21)

## செம்மணிப் பகுதிக்கு பொலீஸ் பாதுகாப்பு!

### மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கோரிக்கையை அடுத்து ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப்டெம்பர் 8

பெரும் மனித புதைகுழி உள்ளதாகக் கருதப்படும் செம்மணிப் பகுதியில் உள்ள தடயங்கள் சட்டவிரோதமான முறையில் அகற்றப்படாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக அப்பகுதிக்கு பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்படவிருக்கின்றது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கோரிக்கையை அடுத்தே பொலீஸ் பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அறிய வந்தது.

புதைகுழி உள்ள பிரதேசத்திலிருந்து தடயங்கள் அப்புறப்படுத்தப்படலாம் என்ற அச்சம் பொதுவாக நிலவுகின்றது என மனித உரிமைகள் ஆணைக்குழு, வடக்கில் உள்ள படைகளின் கட்டளைத் தளபதிக்கு எழுத்து மூலம் சுட்டிக்காட்டியதாகவும் —

புதைகுழி உள்ளதாகக் கருதப்படும் இடங்களின் விவரத்தை நிலவரைபடம் மூலம் ஆணைக்குழு தெரிவித்திருந்ததாகவும் —

அதையடுத்தே. அந்த இடங்களுக்கு பொலீஸ் பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கும்படி யாழ்ப்பாணத்துக்குப் பொறுப்பான பிரதி பொலீஸ்மா அதிபரை யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி கோரியதாகவும் — தெரிய வருகின்றது.

இந்தப் பணிப்புரையை அடுத்து சம்பந்தப்பட்ட பகுதியில் பொலீஸாரைப் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிய வந்தது.

## சகாவைக் கொன்ற பின் சிப்பாய் தற்கொலை!

### வேலணையில் சம்பவம்

யாழ்ப்பாணம், செப். 8

வேலணைத்துறையில் கடமையிலிருந்த கடற்படைச் சிப்பாய் ஒருவர் தனது சகா ஒருவரைச் சுட்டுக் கொலை செய்ததுடன் அதே துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவம் குறித்து ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நேற்றுப் பிரஸ்தாபிக்கப்பட்டது. இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது:

வேலணைத்துறையில் கட

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 60 கண்ணிகள் மீட்பு!

கொழும்பு, செப். 8

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினர் குஞ்சுக்குளத்துக்கு அருகே 60 நிலக்கண்ணி வெடிகளைக் கண்டு பிடித்துள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேசமயம் குஞ்சுக்குளம் காவலரண் பகுதியில் கடமையில் இருந்த படையினர் மீது

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பூவரசங்குளம் பாதை நேற்று திறக்கப்பட்டது

### போக்குவரத்து ஆரம்பம்

வவுனியா, செப். 8

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கும் வவுனியாவுக்கும் இடையேயான பூவரசங்குளமூடான தரைப்பாதை நேற்று முதல் போக்குவரத்துக்குத் திறக்கப்பட்டுள்ளது.

1990 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இப்பாதையூடாக பயணிகள் போக்குவரத்து நடைபெறுவது இதுவே முதல் முறையாகும். இரண்டு கோடியே 35 லட்சம் ரூபா செலவில் இப்பாதை புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

வவுனியா அரச அதிபர் கே. கணேஸ், இலங்கை செஞ்சிலுவைச் சங்க வடக்கு —

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மரணச்சடங்குக்குச் செல்வோருக்கு பயண அனுமதியில் முன்னுரிமை

### தொல்லை தவிர்ப்புக்குழு கூட்டத்தில் முடிவு

கொழும்பு, செப். 8

கொழும்பில் அல்லது தென் பகுதியின் ஏனைய இடங்களில் நடைபெறும் உறவினர்களின் மரணச் சடங்கில் கலந்து கொள்வதற்காகக் குடாநாட்டில் இருந்து செல்வோருக்குப் பயண அனுமதி வழங்குவதில் முன்னுரிமை அளிக்கப்படும்.

அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடி தலைமையில் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று நடைபெற்ற தொல்லை தவிர்ப்புக் குழுக் கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வீதித் தடைகளுக்குப் பொறுப்பான அதிகாரிகள், மற்றும் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு விதிகளும் நேற்றைய கூட்டத்தில வெளியிடப்பட்டன.

இக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட மேலும் சில தீர்மானங்கள் வருமாறு:—

★ மீன் குடியிருப்புக்கா...

யாழ்ப்பாணம் செல்பவர்கள் பாதுகாப்பு அமைச்சின் சத்தியக்கடதாசியை எடுத்துச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லையில் தொடரும் உண்ணாவிரதம்

வவுனியா, செப். 8

நிவாரண வெட்டைக் கண்டித்து முல்லைத்தீவு அரச செயலகம் முன்பாக நேற்றும் ஆறாவது நாளாக உண்ணாவிரதப் போராட்டம் இடம்பெற்றது.

நேற்றைய உண்ணாவிர

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வாஜ்பாய் தலையிட கோரிக்கை

சென்னை, செப். 8

இலங்கை இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வு காண்பதற்கு இந்தியப் பிரதமர் வாஜ்பாய் உதவ வேண்டும் என்று பாரதீய ஜனதாக்கட்சியின் தமிழகப் பிரிவு கோரியுள்ளது.

பாரதீய ஜனதாக் கட்சி...

(10 ஆம் பக்கம் பார்க்க)

## காரைநகருக்கு இனி நேரடி பஸ் சேவை

யாழ்ப்பாணம், செப். 8

தற்சமயம் யாழ்ப்பாணத்தில் இருந்து பொன்னாலை வரை நடைபெற்று வரும் பஸ் சேவையை காரைநகர் வரை நீடிக்க அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

காரைநகருக்கான முதல் நேரடி பஸ்சேவை யாழ். நகரில் இருந்து அனேகமாக நாளை புதன்கிழமை முதல் ஆரம்பமாகும் என யாழ். பஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாவது பிறந்த நாள் வாழ்த்து!



பழம் றோட் ஆறுகால் மடத்தைச் சேர்ந்த
**சுபாஸ்குமார் - அன்பரசி தம்பதிகளின்**
செல்வப்புதல்வன்

## நவலக்ஷன்

தனது முதலாவது பிறந்த நாளை அவரது இல்லத்தில் இன்று விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை பிரான்ஸில் வசிக்கும் அன்பு அப்பா, அம்மா ஜேர்மனியில் வசிக்கும் மாமாமார் சித்தப்பாமார், பெரியப்பாமார், சித்திமார், பாட்டாமார், பாட்டிமார், அமல் மாமா குடும்பத்தினரும்

கண்ணகை அம்மன் அருள் பெற்று சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

தகவல்;
சிவா [மாமன்]

(சி/4794)

## விக்னா கல்வி நிறுவனம்

**A/L 99** கலை – வர்த்தக வகுப்பு
DAY CLASS

கணக்கியல் — திரு. பாலவாசன் தமிழ் — திரு. லிங்கம்
பொருளியல் — திரு. விக்கி இ / சமயம் } திரு.
வர்த்தகம் — திரு. முரளி இ / நாகரிகம் } பத்மராஜா
அளவையியல் — திரு. சயந்தன் புவியியல் – செல்வி நிர்மலா
புள்ளிவிபரவியல் — பிரபல ஆசிரியர்
கிறிஸ்தவம் — திரு. வசந்தன்
நாடகமும் அரங்கியலும் — திரு. மதி


ஆரம்பம்: 14 - 09 - 98 7 30 மணி

★ னுமதிகளை முன்கூட்டியே பெறவும்.

(59023)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
05 — 09 — 1937



உதிர்வு:
18 — 09 — 1997

## அமரர் வல்லிபுரம் பசுபதி

வீட்டை இடிதாக்கி விட்டதுவோ?
நாட்டைக் கடல்சார்ந்து விட்டதுவோ?
கண்ணாளா உந்தன் உடல் சாய்ந்ததேனோ?

அன்பால், அனுசரிப்பால், ஆதரிப்பால், நற்குணத்தால், பண்பால் எமைக்கவர்ந்த தெய்வமே — என்பால் இரக்கமிலாததாலோ ஏனோ ஒரு சொல்லும் உரைக்காதகன்றாய்.

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(59016)

## மண்வெட்டிகள் விநியோகம்

யாழ்ப்பாணம், செப். 8

யாழ். மாவட்டத்திலுள்ள கமநல சேவை நிலையங்கள் ஊடாக இதுவரையும் 7 ஆயிரத்து 378 மண்வெட்டிகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. (ஐ-5)

## யாழ். இந்துவில் விவேகானந்தர் சிலை திறப்பு

யாழ். இந்துக் கல்லூரியில் விவேகானந்தர் சிலை திறப்பு விழா இன்று காலை 9 மணிக்கு கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறும்.

இந்த வைபவத்தில் செங்கல்பட்டு இராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த சுவாமி விருபக்ஷானந்தாஜி மகராஜ், கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் உப தலைவர் சுவாமி ஆத்மகணாநந்தாஜி மகராஜ், மட்டக்களப்பு இராமகிருஷ்ணமிஷனைச் சேர்ந்த சுவாமி அஜராதமானந்தாஜி மகராஜ் ஆகியோர் பங்குபற்றவிருக்கின்றனர்.

வைபவத்துக்கு முன்னர் சிவதொண்டன் நிலையத்தில் இருந்து துறவிகள் ஊர்வலமாக அழைத்து வரப்படுவர்.

பஜனை, சொற்பொழிவு ஆகியன இடம்பெறும்.

## உள்ளூராட்சி ஓய்வூதியம்

யாழ். மாவட்ட உள்ளூராட்சித் திணைக்களத்தைச் சேர்ந்த ஓய்வூதியர்களுக்கான ஓகஸ்ட் மாத ஓய்வூதியப் பணம் வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியர்கள் இன்று வங்கிகளுக்குச் சென்று அவற்றைப் பெற்றுக் கொள்ளலாமென்று வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-6)


## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி
இன்று
அர்ஜுன் — தபு
நடித்த
**தாயின் மணிக்கொடி**
(புதிய வெளியீடு)
நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)
Tele. No. 070-212228
(58891)

## ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்.
ரஜனி, மீனா
நடித்த
**முத்து**
(கடைசி வாரம்)
10-30, 2-00, 5-00
(புதிய நேரம்)

## ராஜா 'B' திரை

யாழ்ப்பாணம்.
இன்று முதல்
பிரபு - சுகன்யா
சிவரஞ்சினி, விசு
மனோரமா
கவுண்டமணி நடித்த
**சின்ன மாப்பிள்ளை**
(சி/4778)

## நாகம்ஸ் சினிமா

சுன்னாகம்
கமல் (இருவேடம்)
சுகன்யா நடித்த
**இந்தியன்**
திரைப்படக் கூட்டுத்
காட்சிகள்
[59026]


# மரண அறிவித்தல்கள்

## பொன்னையா காராளசிங்கம்

சட்டத்தரணியும் சர்வதேச இறைவரி ஆலோசகருமான பொன்னையா காராளசிங்கம் ஞாயிற்றுக்கிழமை (6-9-98) இரவு காலமானார்.

இவர் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், இந்திரசேனன் (பணிப்பாளர், ட்ரைரெல் சேர்விசஸ் லிமிட், Tritell Services Ltd), டாக்டர் ரூபசேனன் (ஆஸ்திரேலியா), டாக்டர் இந்திரஜித் (U. K.) ஆகியோரின் அருமைத் தந்தையும், அஞ்சலியின் (ஆஸ்திரேலியா) அன்புப் பேரனுமாவார்.

இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
எஸ். எஸ். செல்வநாயகம்.
15, ஜானகி லேன்,
பம்பலப்பிட்டி, கொழும்பு 4.

(சி/4796)

## இராமலிங்கம் கணேஸ்வரன்

(செயலாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி முன்னாள் செயலாளர் மானிப்பாய் பிரதேசசபை)

தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட இ. கணேஸ்வரன் 07-09-1998 திங்கட்கிழமையன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் தம்பதியினரின் அன்பு மருமகனும், செல்வரஞ்சினிதேவியின் அன்புக் கணவரும், சுரேஷ், சதீஸ் (இரத்தப் பரிசோதகர், கிளிநொச்சி), பிரகாஸ் (மாணவன், யாழ். இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற மகேஸ்வரன் (மத்திய வங்கி), புவனேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற வை. நடராசா (ஓய்வுபெற்ற ஆசிரியர்) வை. இராசையா (ஓய்வுபெற்ற உதவி அரசாங்க அதிபர், J P.), வை. நவராசா (ஓய்வுபெற்ற தபாலதிபர்), வை. ஸ்கந்தவரதன் (வ. பி. போ. ச.), வை. குகானந்தராசா (ஓய்வுபெற்ற தட்டெழுத்தாளர்) ஆகியோரின் மைத்துனரும், இந்திரா, சர்மிலி ஆகியோரின் அன்பு மாமனாரும், அனுஷா, சங்கீர்த்தா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 08-09-1998 இன்று செவ்வாய்க்கிழமை மாலை 3 மணியளவில் கொழும்பில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
வை. ஸ்கந்தவரதன் (தவம்)
மடத்தடி லேன்,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

(59119)

## முருகேசு இராஜேந்திரம்

அல்வாய் வடக்கு ஆலங்கட்டையைச் சேர்ந்த முருகேசு இராஜேந்திரம் அவர்கள் 07 - 09 - 1998 திங்களன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு — செல்லம்மா தம்பதியினரின் மூத்த புதல்வரும், தங்கம்மாவின் அன்புக் கணவரும், இராஜேஸ்வரன் (உதவிப் பதிவாளர், யாழ். பல்கலைக்கழகம்), ஜெயனேஸ்வரன், குகனேஸ்வரன் (உரிமையாளர் L K. மோட்டோர்ஸ், மட்டக்களப்பு), தங்கநிலா, குமரேஸ்வரன் (பரு, ப. தெ. வ. அ கூ. ச.), முருகேஸ்வரன், ஞானேஸ்வரன் (ஜேர்மனி), வெண்ணிலா, உதயநிலா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திரவேல் (நிலா ஸ்ரோர்ஸ்), உதயணன் (லண்டன்), இராஜசுலோசனி, நிதி, புஸ்பலதா, நந்தாவதி, ஜெயா ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 8 - 9 - 98 (செவ்வாய்) மு. ப. 10 30 மணியளவில் பருத்தித்துறை இந்து மயானத்தில் நடைபெறும். இத்தகவலை உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இரா. இராஜேஸ்வரன்
(மகன்)

(59015)

## தர்மகுலசூரியர் யோகராணி

ஆனைக்கோட்டை ஆறுகால்மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தர்மகுலசூரியர் யோகராணி 05. 09. 98 அன்று ஜேர்மனியில் அகாலமரணமானார்.

அன்னார் நடராசா - போகம்மா ஆகியோரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற தர்மகுலசூரியரின் (போதகர் நவஜீவனம்) அன்பு மனைவியும், நிறைமதி, நிஷாந்தினி, தயாபரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், தியாகராசா (ஜேர்மனி), ரஜனி (ஜேர்மனி), பதமராஜா (ஜேர்மனி), கமலராணி, ராஜி ஆகியோரின் அன்புச் சகோதரியும், திரவியராஜ் (ஜேர்மனி), சாந்தி (ஜேர்மனி), சாந்தா (ஜேர்மனி), ஜெகநாதன், பிரகாஸ் ஆகியோரின் அன்பு மைத்துனியும், திவாணி, ராகிணி, கரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், திபீசன், தேனுகா, கிருஷாந், டினோஜன், கீர்த்திகா, பவித்திரா, கவிஷனா, தர்ஷனா ஆகியோரின் அன்புப் பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் ஜேர்மனியில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மு. நடராசா
(தந்தை)
மானிப்பாய் வீதி,
ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.

(சி/4791)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோனியா தலைமைக்கு சரத்பவார் ஆதரவு!

## சகல பிரிவினரும் ஏற்கக்கூடிய தலைவர் என்கிறார்

புதுடில்லி, செப். 8
''நாட்டின் பிரதமராக திருமதி சோனியா காந்தியை நிறுத்துவதில் எனக்கு ஆட்சேபனை இல்லை''

மேற்கண்டவாறு இந்திய எதிர்க்கட்சித் தலைவர் சரத்பவார் தெரிவித்தார்.

செய்தியாளர்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

காங்கிரஸ் கட்சியின் எல்லாப் பிரிவினரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தலைவராக சோனியா இருக்கிறார்.

சோனியா காந்தி விடயத்தில் ஒருவருக்கு ஒரு பதவி என்ற கோட்பாடு பொருந்தாது. தனது அடிப்படைக் கொள்கை மற்றும் முன்னுரிமைகளை விட்டுக் கொடுக்காமல் இடைக்கால கூட்டணியை அமைத்துக் கொள்ள காங்கிரஸ் தயாராக இருக்கிறது இப்படி அவர் கூறினார்.

இதே வேளை மத்திய பிரதேசத்தில் உள்ள பஞ்மாரியில் நடைபெற்ற காங்கிரஸின் மூன்று நாள் கூட்டத்தின் இறுதியில் ''பஞ்மாரிப் பிரகடனம்'' என்ற கொள்கை ஆவணம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

அந்தப் பிரகடனத்தில் வகுப்பு வாதத்தை எதிர்த்து முறியடிக்க முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதுடன் ஒரு கட்சி ஆட்சி அமைப்பது தற்போதைய சூழ்நிலையில் சாத்தியமில்லை. எனவே இடைக்காலக் கூட்டணியை அமைத்து ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் கடமையில் இருந்து காங்கிரஸ் பின் வாங்காது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் அடிப்படைக் கொள்கையிலோ, வகுப்புவாதமுன்னுரிமையிலோமாற்றம்இருக்காது என்றும்வகுப்புவாத சக்திகளுக்கு எதிராக காங்கிரஸ் இடைவிடாது போராடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சிறுபான்மையினர் ஆகியோரின் நலனுக்காக அரசமைப்பில் கூறப்பட்டவாறு நல நடவடிக்கைகளை கண்காணிப்பது என்றும்—

அனைத்துத் துறைகளிலும் மகளிருக்கான ஒதுக்கீட்டுக்கும் கவனம் செலுத்தப்படும் என்றும்— தெரிவிக்கப்பட்டது.

★ மக்கள் தொகையை கட்டுப்படுத்துவதில் முக்கிய செயற்றிட்டங்களை அமுல் படுத்தல்.

★ பொருளாதாரத் துறையை ஏழு அல்லது எட்டு சத வீதத்திற்கு உயர்த்துவதுடன் சோசலிச பொருளாதாரத்துறையை நடைமுறைக்குக் கொண்டுவருதல்,

★ முதலீடுகளை மேம்படுத்தி வாழ்க்கைத்தரத்தை உயர்த்துதல்,

★ உள்நாட்டுத் தொழில்களைப் பாதுகாத்தல் விவசாயத் துறைக்கு மேலதிக அந்தஸ்து வழங்கி, புதிய தேசிய நீர்க்கொள்கையை அறிமுகப் படுத்துதல், உலகநாடுகளின் அணு ஆயுதக் குறைப்பிற்கு அயல் நாடுகளுடன் பேச்சு நடத்துதல் போன்ற பல தீர்மானங்களுக்கும் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. (இ-ரி)

## மேலும் இருவர் உயிரிழப்பு

நீர்க்கோர்வை நோயினால் புதுடில்லியில் மேலும் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இதனால் இறந்தோரின் எண்ணிக்கை 49 ஆக உயர்ந்துள்ளது.

கலப்படக் கடுகு எண்ணெயை உண்டதனாலேயே இந் நீர்க்கோர்வை நோய் ஏற்பட்டது.

இதேவேளை கடுகு எண்ணெய் கலப்படத்துக்கு பொறுப்பேற்று வாஜ்பாய் அரசு பதவி விலக வேண்டும் என ஜனதா தளம் கோரிக்கை விடுத்துள்ளது.

## கட்சி அரசியலை மறந்து ஒன்றுபட்டு உழையுங்கள்

### அரசியலாளருக்கு அழைப்பு

டாக்கா, செப். 8
''உங்களுக்கிடையேயான வேறுபாடுகளை ஒதுக்கி வைத்துவிட்டு ஒன்றுபட்டு உழையுங்கள்''

இவ்வாறு பங்களாதேஷ் குடியரசுத்தலைவர் சகாபுரீன் அகம்மது அந்நாட்டு அரசியல் வாதிகளைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

பங்களாதேசில் வெள்ள நிலைமையை நேரில் சென்று பார்த்ததன் பின்னரே அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

அதே சமயம் கங்கை நதியின் நீர் மட்டம் வேறு எந்தக் காலத்திலும் இல்லாத அளவிற்கு உயர்ந்துள்ளது.

பிரமபுத்திரா நதியிலும் நீர் மட்டம் பத்தாண்டுகளுக்கு முன்னர் பேரழிவை ஏற்படுத்திய வெள்ளப் பெருக்கு ஏற்பட்ட போது இருந்த அளவை அண்மித்துக் கொண்டு இருக்கின்றது என செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-ரி)

## சேர்நோமைடினை ஆதரிக்குமாறு கம்யூனிஸ்ட்டுக்களிடம் கோரிக்கை

### நாடாளுமன்றத்தில் மீண்டும் வாக்கெடுப்பு

மொஸ்கோ, செப் 8
ரஷ்யாவின் தற்காலிகப் பிரதமராக நியமிக்கப்பட்டுள்ள செர்நோமைடினின் நியமனத்துக்கு அங்கீகாரம் பெறும் முயற்சி மீண்டும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பான வாக்களிப்பு ரஷ்ய நாடாளுமன்றமான டுமாவில் நேற்று இடம் பெற இருந்தது.



சேர்நோமைடின்

ஏற்கனவே பிரதமராக இருந்த கிரியெங்கோவை பதவி நீக்கம் செய்து விட்டு புதிய தற்காலிகப் பிரதமராக ஜனாதிபதி யெல்ட்ஸினினால் இவர் நியமிக்கப் பட்டிருப்பது தெரிந்ததே.

இவரது நியமனத்துக்கு நாடாளுமன்றத்தின் அங்கீகாரம் அவசியம்.

கடந்த வாரம் செர்நோமைடினின் நியமனம் அங்கீகாரம் பெறுவதற்காக நாடாளுமன்றம் வந்தபோது நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை வகிக்கும் கம்யூனிஸ்ட்டுக்கள் எதிர்த்து வாக்களித்து தோற்கடித்தனர்.

தற்பொழுது இரண்டாவது தடவையாக இது அங்கீகாரத்துக்காக வருவதால் இதற்கு ஆதரவாக வாக்களிக்குமாறு ஜனாதிபதி பொறிஸ் யெல்ட்ஸினும் பிரதமர் செர்நோமைடினும் கம்யூனிஸ்ட்டுக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

1993 இல் அமுலுக்கு வந்த ரஷ்யாவின் புதிய அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி அங்கீகாரத்துக்காக நாடாளுமன்றத்துக்கு அனுப்பும் ஒரு நியமனத்தை நாடாளுமன்றம் மூன்று தடவைகள் நிராகரித்தால் நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு ஜனதிபதி மறு தேர்தலுக்கு உத்தரவிட முடியும்.

முன்னைய பிரதமரான கிரியெங்கோவின் நியமனத்தையும் நாடாளுமன்றம் இரு தடவைகள் நிராகரித்தது.

நாடாளுமன்றத்தைக் கலைக்கப்போவதாக யெல்ட்ஸின் அச்சுறுத்தியதை அடுத்தே மூன்றாவது தடவை அங்கீகாரத்துக்காக வந்தபோது நாடாளுமன்றம் அங்கீகாரித்தது. (இ-ரி)

## உலக அரங்கில்

### மியான்மார் நாட்டவர் கைது

உத்தரப் பிரதேசத்தின் சகரான்பூர் மாவட்டத்தில் சட்டவிரோதமாக தங்கி இருந்த 45 மியான்மார் நாட்டவர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்களை சிறையில் அடைக்கும் படி நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது. (இ-ரி)

### பயிற்சி முகாம் சேதம்

ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா நடத்திய ஏவுகணைத் தாக்குதலின்போது கர்பத்துள் அம்சர் நடத்தும் பயிற்சி முகாம்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன என வாஷிங்டன் ரைம்ஸ் தெரிவித்துள்ளது. (இ-ரி)

## ஹுன்சென் வாசஸ்தலம் குண்டு வீச்சில் சேதம்

நொம்பென், செப் 8
கம்போடியாவின் இரண்டாவது பிரதமர் ஹுன்செனின் வாசஸ்தலம் கைக்குண்டுத் தாக்குதலுக்கு இலக்கானது.

அச்சமயம் ஹுன் சென் அங்கு இருக்கவில்லை என்று பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

நகரின் மத்தியில் உள்ள அவரது வாசஸ்தலத்துக்கு குண்டு வீசப்பட்ட போதும் எவரும் காயம் அடையவில்லை.

மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் இத்தாக்குதலை நடத்திவிட்டுத் தப்பிவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பொலிஸார் உடனடியாக வாசஸ்தலத்தைச் சுற்றி வளைத்துக் கொண்டனர்.

இத்தாக்குதலுக்கு எதிர்க்கட்சியினரே காரணம் என ஹுன் சென் குற்றஞ்சாட்டி உள்ளார். (இ-3)


றோயல் அக்கடமி

சாவகச்சேரி

**A/L 99 DAY CLASS**

ஆரம்பமாகி விட்டன.

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. வரதராஜன் |
| கணக்கியல் | — | திரு. கொலின் |
| வர்த்தகம் | — | திரு. முரளி |
| புள்ளிவிவரவியல் | — | திரு. தவனேசன் |
| தமிழ் | — | திரு. ஆர்த்திகன் |
| இந்துநாகரிகம் இந்துசமயம் | } | பிரபல ஆசிரியர் |
| புவியியல் | { | திரு. நித்தி திரு. ஜெபதாஸ் |
| அரசியல் | — | திரு. சந்துரு |

பாடத்திட்டம் ஆரம்பத்திலிருந்து பூர்த்தியாக்கப்படும்.

நேரசூசிகை:
புதன் 09 - 09 - 98 காலை 7-00 பொருளியல்
8-00 வர்த்தகம்

- நிர்வாகி

(59009)


## அக்கினி-2 ஏவுகணை இந்தியா பரிசோதிக்கும்

புதுடில்லி, செப். 8
நடுத்தர உந்து விசை ஏவுகணைப் பரிசோதனையில் ஈடுபட்டுள்ள இந்தியா வெகு விரைவில் அதி சக்தி வாய்ந்த ''அக்னி-2'' ஏவுகணையைப் பரிசோதிக்கும் என்று இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணாண்டஸ் தெரிவித்துள்ளார்.

''அக்னி-2'' ஏவுகணை அணு ஆயுதத்தை எடுத்துச் செல்லக் கூடியது என்றும்-

இதன் வீச்சு எல்லை ஆயிரத்து 500 கிலோ மீற்றர் என்றும்- தெரிவிக்கப்படுகிறது.

''அகனி-1'' ஏவுகணையை விட இதன் வீச்சு எல்லை இரண்டு மடங்கு அதிகம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

''அக்னி-1'' ஏவுகணை 1993 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மூன்று தடவைகள் வெற்றிகரமாக பரீட்சிக்கப்பட்டுவிட்டது. ஆனால் இராணுவத்தினால் இது இன்னும் உள்வாங்கப்படவில்லை. (இ)

## ஈரானிய எல்லையில் தலிபான் துருப்புகள்

காபூல், செப். 8
ஈரானை அண்டிய ஆப்கானிஸ்தான் எல்லையில் தலிபான் தனது துருப்புக்களைக் குவித்துள்ளது.

ஈரானியப் படை எடுப்பினை எதிர் கொள்வதற்காக ஹெரத், மும்ராஜ் நகர்களிலேயே துருப்புக்கள் நிறுத்தப்பட்டுள்ளதாக அங்கிருந்து வெளியாகும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தலிபானின் வசம் உள்ள ஈரானியரை மீட்பதற்கு படை பலத்தை உபயோகிக்கப் போவதாக ஈரான் அச்சுறுத்தியதை அடுத்து தலிபான் இந்த நடவடிக்கையை மேற் கொண்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் குறுக்கிடாமல் ஈரானைத் தடுக்கும் படி ஐ. நாவையும் தலிபான் கேட்டுக் கொண்டுள்ளது. (இ-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தேவை

இலுறுசசிக ம்க" ழிகள உடன்தேவை. தொடர்பு: Nallur Farm Centre. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (59005)

## மணமகள் தேவை

தெல்லிப்பழையைப் பிறப்டமாகக் கொண்ட கௌவ குடும்பத்தைச் சேர்ந்த உயர் கல்லூரியில் கல்வி கற்பிக்கும் சங்கீத ஆசிரியருக்கு 27 வயதுக்குட்பட்ட செவ்வாய்க் குற்றமுள்ள அழகிய மணமகள் தேவை. முழு விவரத்துடன் தபாலில் தொடர்பு கொள்ளவும். முகவரி: க. கோவிந்தசாமி, வட்டு. வடக்கு, சித்தங்கேணி. (59004)

## புறொயிலர்விற்பனைக்கு

புறொயிலர் விற்பனைக்கு உண்டு. தேவையானவர்கள் உடன் தொடர்பு கொண்டு விலை விவரத்தை 11-09-98 இற்கு முன் சமர்ப்பிக்கவும். பொதுமுகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய். (சி/4785)

## சோதிடம்

ஞாயிற்றுக்கிழமைகளில் சோதிட வகுப்புகள் நடைபெறுகிறது. முதலில் வான சாஸ்திரமும் நேரமும் மிக விரிவாக கற்பிக்கப்படுவதால் இதை மட்டும் பயில விரும்புவோரும் விண்ணப்பிக்கலாம். விரும்பிய நேரத்தை குறிப்பிடவும். கடிதம் மூலம் தொடர்பு கொள்க: S. C. இம்மானுவேல் பொறியியலாளர், 'புஸ்ப விலா' சங்கானை றோட், அச்சுவேலி (58980)

## அறை வாடகைக்கு

சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு அண்மையில் பாடசாலை மாணவிகள் இருவருக்கும் (விரும்பின் சாப்பாட்டுடன்) சகல வசதிகளையும் உடைய அறை வாடகைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: A. சிதம்பரநாதன், குமரன் ரேடர்ஸ், 119, கண்டிவீதி, சாவகச்சேரி. (58887)

# அகதிகளுக்கு அன்பளிப்பு

அச்செழுவில் மீளக் குடியமர்ந்த சுமார் 500-க்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட பாய், விளக்கு, சமையற்பாத்திரங்கள், பிளாஸ்ரிக் வாளிகள் என்பன வலி. கிழக்கு உதவி அரசாங்கஅதிபர் கே. கேதீஸ்வரனால் அச்செழுவில் வைத்து அண்மையில் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் கோப்பாய் உதவித்திட்டமிடல் அதிகாரி ஆ. கதிரமலைநாதன், கிராம அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-110)

# முச்சக்கர வண்டிகள் அன்பளிப்பு

தென்மராட்சி, செப். 8

வடக்கு - கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களகத்தினால் வழங்கப்பட்ட நான்கு முச்சக்கர வண்டிகள் தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்கு வந்துள்ளன.

இந்த முச்சக்கர வண்டிகள் இந்தப் பிரதேசத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த நால்வருக்கு பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளையினால் வழங்கப்பட்டன. (ஐ-117)

# சென்ஜோன்ஸ் தொண்டர்களுக்கு பாராட்டு

தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலய உற்சவத்தில் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைத்தொண்டர்கள் சிறப்பாகப் பணியாற்றியமைக்காக பாராட்டுப் பெற்றுள்ளனர்.

வடமராட்சிப் பிரிவு மாவட்ட நிறைவேற்று உத்தியோகத்தரரான செ. சிவலிங்கராசா தலைமையில் ஆலய உற்சவத்தில் தொண்டர்கள் பணிபுரிந்தனர்.

விசேட உற்சவ காலத்தில் தென்மராட்சி, வலி. வடக்கு, வலி. கிழக்கு, வலி. மேற்குப் பகுதிகளில் இருந்து தொண்டர்கள் பங்குபற்றினர்.

---

பரீட்சை முடிவுகள் வரும் வரை
பொறுத்திருப்பது புத்திசாதுரியம் அல்ல

**A\L DAY CLASS 99**

**கலை, வர்த்தகப் பிரிவு**

**ஆரம்பம்: 14 - 09 - 98**

திங்கள் 8 மணி [ பழைய நேரம் ]

D.SAM

**D. M. I.**

366, STANLEY ROAD, JAFFNA.

(சி/4706)

---

# வல்வெட்டித்துறை நகரசபை
# பதவி வெற்றிடம்

பின்வரும் மூன்று பதவிகளுக்கும் என்னால் ஆட்சேர்க்கும் முகமாக தகுதியுடைய ஆண் விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பதில் அலுவலக இராக்காவலாளி தவிர்ந்த ஏனைய இரு பதவிகளும் நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமாக மூன்று ஆண்டுகளுக்கு தகுதிகாண் கால அடிப்படையில் அமைந்துள்ளதும் ஆகும்.

1) வருமான மேற்பார்வையாளர்

1) வயது 18 கும் 45 வயதுக்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
2) நல்ல தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.
3) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது ஆறு பாடங்களில் சித்தியடைந்து இருப்பதோடு தமிழ் மொழி, கணிதம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்குச் சமமான பரீட்சையொன்றில் (எச். என். சி.) சித்தியடைந்தும் குறித்த பாடங்களில் திறமைச்சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.
3) நகரசபையின் நிர்வாக எல்லைக்குள் அல்லது அதனை அண்மித்த பிரதேசங்களில் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
5) வேதன அளவுத்திட்டம் பின்வருமாறு அமைகிறது,
45180 — 23 1320 — 75540 (ரீ/ 1 — 4)

2) சுகாதாரத் தொழிலாளி

1) வயது 18 க்கும் 45 வயதுக்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
2) நல்ல தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.
3) 5 ஆம் வகுப்பில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
4) நகரசபையில் பதில்/அமைய அடிப்படையில் கடமையாற்றுபவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
5) சம்பள அளவுத்திட்டம்:
40,800 — 20 960 — 60,000 (ரீ/ 1—1)

3) பதில் அலுவலக இராக் காவலாளி

1) வயது 18 க்கும் 45 க்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
2) நல்ல தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.
3) 8 ஆம் வகுப்பில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
4) நகரசபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
5) சம்பள அளவுத்திட்டம்;
வேலை செய்யும் நாளொன்றுக்கு ரூபா 140 வேதனமாக வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் யாவும் சகல விவரங்களையும் உள்ளடக்கியவாறு தயாரிக்கப்பட்டு, விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்தில் பூரணப்படுத்தப்பட்டு 30 - 09 - 1998 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ கிடைக்கக்கூடியதாக தலைவர், நகரசபை, வல்வெட்டித்துறை என்ற விலாசத்திற்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

மேலதிக விவரங்களை அலுவலகத்தில் கடமை நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

எம். கே. சிவாஜிலிங்கம்,
தலைவர்,
நகரசபை, வல்வெட்டித்துறை.

நகரசபை அலுவலகம்,
வல்வெட்டித்துறை.
03 - 09 - 98

(சி/4789)

---

# தூய அன்னையின் கடாட்சம் எங்கும் பொலிக!

பேரன்புக்குரிய சுவாமிஜி அவர்களுக்கு

நமஸ்காரம். தூய அன்னை ஸ்ரீசாரதாதேவியின் ஆலய கும்பாபிஷேக விஞ்ஞாபனம் கிடைக்கப்பெற்றேன். உளம் மகிழ்வெய்தினேன். கருணைக்கடலாகிய பகவான் ஸ்ரீராமகிருஷ்ண தேவரின் பேரருளாலும், எமது சங்கத்தினைச் சார்ந்த மூத்த துறவியர்களின் நல்லாசிகளுடன் நடைபெறவுள்ள இப்புண்ணிய கருமம் சகல விதங்களிலும் சிறப்புற சிறியேனும் எனது நல்வாழ்த்துக்களை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இன்றைய நிலையில் எம்மவர்களுக்கு அவசியமானது தூய அன்னையின் அருளாசியே என்பதை உணர்ந்து அதற்கேற்றவாறு தாங்கள் தனியொருவராகத் தளராத உள்ளத்துடன் உழைத்ததின் பெறுபேறே அன்னையின் ஆலயமென்பது வெள்ளிடைமலை. அவ்வாலயத் திருப்பணிக்காக அருந்தொண்டாற்றிய அனைவருக்கும் அன்னையின் அருளாசி கிடைப்பதாகுக.

"தூய்மை, பொறுமை, விடாமுயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவையாகும். அத்துடன் இவை அனைத்திற்கும் மேலாக அன்பு இருந்தாக வேண்டும்" என்ற சுவாமி விவேகானந்தரின் அறிவுரைக்கமைய வாழ்ந்து, ஆலய நிர்மாணத்திற்காக அயராதுழைத்த உங்களை வாழ்த்துவதில் பெருமையுறுகிறேன். உங்கள் தெய்வப்பணி மென்மேலும் தொடர்வதாகுக.

தூய அன்னையின் அன்பு எனும் தாரக மந்திரத்தில் தோய்ந்து அதற்கேற்றவாறு பணிபுரியும் உங்களை மீண்டுமொருமுறை மனதார வாழ்த்துகிறேன்.

மகாகும்பாபிஷேக புனித வைபவத்தினை நேரில் தரிசிக்கும் பேறு பெறப் பெற்றிலேனாயினும், கும்பாபிஷேக நாளன்று மானசிகமாக உங்களருகிலிருந்து சகல நிகழ்வுகளையும் கண்டு மகிழும் வாய்ப்பு எனதுள்ளத்திற்குக் கிடைக்குமென்பதைத் கூறிக் கொள்கிறேன்.

"தூய அன்னையின் அருட்கடாட்சம் என்றும் எங்கும் பொலிக" என வாழ்த்துகிறேன்.

இவ்வண்ணம் அன்னையாரின் திருவடிகளே
சரணென புகுந்த
**சுவாமி ஜீவனானந்தா**

இராமகிருஷ்ணமிஷன் ஆச்சிரமமும்,
குழந்தைகள் இல்லமும்,
இராமகிருஷ்ணபுரம்,
மட்டக்களப்பு.

[பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் சாரதா திருக்கோயில் கும்பாபிஷேக வைபவத்தையொட்டி மட்டக்களப்பிலிருந்து சுவாமி ஜீவனானந்தா அவர்கள் சுவாமி சித்ரூபானந்தாவுக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தி இது.]

(சி/4790)

---

# 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 15 | | 19 |
| 06 | | 09 |
| 1944 | | 1989 |



## அமரர் இ. கிளி

திதி:- திருதியை 08 - 09 - 1998

அன்பும் பண்பும் அதிகம் காட்டி
எமை சிறப்புடன் வாழ வைத்த தெய்வமே! அப்பா!
அவனியில் உன் முகம் காண ஏங்குதெம்
நெஞ்சமே மாமா
உமக்கு ஈடாய் எமக்கு யார் வருவார் அண்ணா
உமது முகத்தை மீண்டும் காண்போமா அத்தான்
நீங்கள் எமைவிட்டுச் சென்றாலும்
மனச் சாந்தி அடைவீராக

சாந்தி! சாந்தி! சாந்தி!

அன்னாரின் பிரிவால் வாடும்:
மனைவி, மகள், மருமகன்,
சகோதரர், மைத்துனர்.

"வளர்மதி வாசா"
கரவெட்டி.

(59017)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். வருவதற்கு கப்பலின்றி 3,000 பேர் மன்னாரில் தவம்!

மன்னார், செப். 8

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னியில் இருந்து வந்த சுமார் 3ஆயிரம் பேர் கப்பல் வசதியின்றி மன்னார் முகாம்களில் கடந்த மூன்று மாதங்களாக தவம் கிடப்பதாக மன்னார் செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னியில் இருந்து யாழ்ப்பாணம் செல்வதற்காக வருபவர்கள் மன்னாரில் தங்க வைக்கப்பட்டு கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டு வந்தனர்.

மன்னாரில் இருந்து காங்கேசன்துறைக்கு நடத்தப்பட்ட கப்பல் சேவை நிறுத்தப்பட்ட பின்னர், மன்னார் வரும் அகதிகள் திருகோணமலைக்கு அனுப்பப்பட்டு, அங்கிருந்தே கப்பலில் அழைத்து வரப்படுகின்றனர்.

குறைந்த எண்ணிக்கையானவர்களே இவ்வாறு யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படுவதால், மன்னாரில் 3 ஆயிரம் பேர் கப்பலை எதிர்பார்த்து காத்துக் கிடக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

இவர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்ட போதும், இவர்களின் அன்றாடத் தேவைகளுக்கு பணம் இன்றி இவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் நோய் காரணமாகவும் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். (இ-3)

# வெளிநாட்டிலிருந்து வரும் தமிழரிடம் பணம் பறிப்பு

## போலியான பொலீஸ் குழு

கொழும்பு, செப். 8

வெளிநாட்டில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்து கொழும்பு நோக்கிச் செல்லும் தமிழர்களிடம் பணம் கறக்கும் போலிப் பொலீஸ் குழு ஒன்று ஈடுபட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

கட்டுநாயக்க விமான நிலைய சோதனையை முடித்துக்கொண்டு வெளியே வரும் தமிழர்களைப் பின் தொடரும் இந்த பொலீஸ் குழு ''புலி என்று காட்டிக் கொடுத்துவிடுவோம்'' என்று அச்சுறுத்தி சுளைசுளையாக பணத்தைக் கறப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் வெளிநாட்டிலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட 5 தமிழ் இளைஞர்கள் இந்தக் குழுவிடம் சிக்கினர்.

அவர்களிடம் ஆயிரம் டொலர் தருமாறு இந்தக் குழுவினர் கேட்டனராம்.

அவர்கள் தமது நிலையை விளக்கி தம்மிடம் பணம் இல்லை என்று கூற, அக்குழு அவர்களை மிரட்டியதாம்.

அவர்களைக் கூட்டி வரச் சென்றவர் என்னிடம் 200ரூபா மட்டுமே உள்ளது என்று தெரிவிக்க அதை வாங்கிக் கொண்டு அவர்கள் சென்றுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (இ-3-164)

# தபால்கள் அனுப்பிவைப்பு

யாழ்ப்பாணம், செப். 8

காங்கேசன்துறையில் இருந்து புறப்பட்ட 'லங்கா முதித'' கப்பலில் 74 தபால் பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ். பிரதம தபாலதிபர் தெரிவித்தார்.

நீண்ட நாள்களாக தேங்கிக் கிடந்த பதிவுத் தபால்கள் மற்றும் வெளியூர்க் கடிதங்களே இந்தப் பொதிகளில் அனுப்பி வைக்கப்பட்டன. (உ-

# நோர்வேயின் உதவியுடன் கடலேரிகள் அபிவிருத்தி

யாழ். கடல் ஏரித்திட்டத்தின் ஒரு பகுதியான உப்பாறு கடல் ஏரியின் அரியாலை ''பறாச்'' மற்றும் வழுக்கியாறு கடல் ஏரியின் அராலி ''பறாச்'' ஆகியவற்றைத் திருத்தி மீளமைக்க நோர்வே அரசாங்கம் இணங்கியுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இலங்கை அரசாங்கம் கேட்டுக்கொண்டதற்கிணங்க நோர்வே அரசால் கடந்த ஜூலை மாதம் அனுப்பப்பட்ட நீரியல் நிபுணர்களான கலாநிதி சண்முகநாதன், கலாநிதி எரிக் ஹலன்ட் ஹசேன் ஆகியோர் யாழ்ப்பாணத்தில் மேற்கொண்ட ஆய்வுகளை அடுத்து அவர்கள் நோர்வே அரசுக்குச்சமர்ப்பித்தஇந்தத் திட்டத்தின் சாத்தியக்கூற்று அறிக்கையின் அடிப்படையிலேயே நோர்வே அரசு உதவி செய்வதற்கு முன் வந்துள்ளது.

இந்த வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நோர்வே அரசு யாழ்ப்பாணத்தில் ஓர் அலுவலகத்தை நிறுவும் என்றும் — அந்த அலுவலகத்தின் மூலமே வேலைத்திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் —

வேலைத்திட்டங்களுக்கு அந்தந்தப்பகுதி மக்களின் உழைப்பைப் பெறுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிய வருகின்றது. (இ-6)

# மக்கள் குடியமர்வு

தென்மராட்சி, செப். 8

இயக்கச்சியை அண்டிய கலுவில் வரை மக்கள் குடியிருக்க அனுமதி வழங்கப்பட்டதையடுத்து இப்பகுதி வரையுள்ள மக்கள் தமது காணிகளில் குடியேறி வருகின்றனர்.

மக்கள் மீளக்குடியமர்வதில் ஆர்வங் காட்டி வருவதால் விரைவில் பெருமளவு மக்கள் அங்கு குடியேறலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்பகுதிக்கான போக்குவரத்துகள் இன்னமும் ஆரம்பிக்கப்படாததால் இப்பகுதி மக்கள் புதுக்காட்டுச் சாந்தி வரை நடந்தும், சைக்கிளிலும் வந்து தமது பயணத்தை மேற்கொள்கின்றனர்.

இயக்கச்சி வரை பஸ் சேவையை நீடிக்குமாறு வட பிராந்திய போக்குவரத்துச் சபையினருக்கு மகஜர் மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ-117)

# செஞ்சிலுவைச் சங்க சாரதி முல்லையில் வேலை நீக்கம்

வவுனியா, செப். 8

நோயாளர்களை அழைத்துச் சென்ற சமயம் அம்புலன்ஸை ஒழுங்காக ஓட்டவில்லை என்ற குற்றச்சாட்டில் செஞ்சிலுவைச்சங்க முல்லைத்தீவு கிளை அம்புலன்ஸ் சாரதி தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் 24 ஆம் திகதி வவுனியாவில் இருந்து புதுக்குடியிருப்புக்கு ஒரு நோயாளியை ஏற்றிச்சென்ற மேற்படி அம்புலன்ஸ் சாரதி பின்னர் மேலும் 10 நோயாளர்களை ஏற்றிக்கொண்டு புதுக்குடியிருப்பு நோக்கிச் சென்றதாகவும்—

அச்சமயம் அவரின் கவனயீனம் காரணமாக அந்த அம்புலன்ஸ் விபத்துக்குள்ளானது என்றும்— தெரிவிக்கப்பட்டது.

இவர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, பின்னர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டார். (இ-164-3)

# மாணவர்களைக் குறை கூறுவோர் திருந்தும் வழியும் சொல்ல வேண்டும்

## சிவத்தமிழ்ச்செல்வி யோசனை

நெல்லியடி, செப். 8

இளம் சிறார்கள் மற்றும் மாணவர்களைக் குறைகூறும் கல்விமான்களும், தொடர்பு சாதனங்களும் அந்தக்குறை எங்கிருந்து உருவாகின்றது என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவற்றைத் தடுக்க, தவிர்க்கக் கூடிய வழிமுறைகளைக் கூற வேண்டும்.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற நூலக வாரத்தை ஆரம்பித்து வைத்துப் பேசிய சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி இவ்வாறு தெரிவித்தார்.

பழைய மாணவர் சங்க ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்ட இவ்வைபவம் கல்லூரி அதிபர் என். சிவகடாட்சம் தலைமையில் நடைபெற்றது.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

கல்வி அறிவுடன் வாசிப்பும், அனுபவமும் ஒன்று சேரும் போது மனிதன் பூரணமடைகிறான். மாணவர் நல்ல நூல்களை வாசித்து அதன்படி ஒழுகுதல் வேண்டும்.

தற்போதுள்ள நெருக்கடியான சூழ்நிலையிலும் சஞ்சீவி போன்ற பத்திரிகைகள் மாணவர்களுக்கு பெரிதும் பயனாக அமைகின்றன என்று குறிப்பிட்டார்.

இந்த வைபத்தில் வைத்திய கலாநிதி க. தியாகராசா, பி. குமாரசிங்கம், எம். [illegible] ஆகியோரும் கலந்துகொண்டனர். (இ-8-109)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வாசகர் திருமுகம்

## மண் அள்ளுவதைத் தடுக்குக!

யாழ். குடாநாடு மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்டுக் காணப்படுவதால் கரையோரப் பகுதிகளில் மண்ணரிப்பு ஏற்படும் சாத்தியம் அதிகமானது. கரையோரப்பகுதிகளில் மணல், சிப்பி போன்றவற்றை அகழ்ந்தெடுத்தல் கடலரிப்பைத் தூண்டும் அபாயகரமான நடவடிக்கையாகும்.

தற்போது காக்கை தீவுக் கடற்கரைப் பகுதிகளில் சிப்பி, மணல் போன்றவற்றை அள்ளும் செயற்பாடு அதிகரித்துள்ளது. இதனால் இந்தப்பகுதி விவசாயிகள் மழை காலத்தில் கடல் நீர் வயற்பகுதிகளுக்குள் உட்புகுந்து விடுமோ என அஞ்சுகின்றனர். இப்பகுதியில் விவசாயம் செய்யும் விவசாயிகள் பெரும்போக விளைச்சலை நம்பியே வாழ்க்கை நடத்துகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த காலங்களில் சிப்பி, மணல் போன்றவற்றை காக்கைதீவுக் கரையோரப்பகுதிகளில் இருந்து எடுத்துச்செல்லல் தடை செய்யப்பட்டிருந்தது. தற்போது வீதி புனரமைப்பு பணிகளுக்கு இப்பகுதிகளில் மண் அள்ளப்படுகிறது. இதனைப் பயன்படுத்தி தனியார்களும் இம் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஒரு பக்கத்தில் வீதி அபிவிருத்திப் பணிக்கான முயற்சி வெற்றியளிக்கும் அதே வேளை மறு புறத்தில் விவசாய அபிவிருத்திக்கான முயற்சி தடைப்படவும் சாத்தியமுள்ளது.

இதனைத் தடுக்காமல் அதிகாரமுள்ள கிராம சேவையாளர்கள், அரச அதிகாரிகள் தொடர்ந்தும் ஏன் மௌனம் சாதிக்கிறார்கள். தமது மௌனத்தைக் கலைத்து விவசாயிகளின் கவலையைப் போக்குவார்களா?

சிவசக்தி

ஆனைக்கோட்டை.

## மக்களைப் பாதித்த உத்தரவு

ஓகஸ்ட் மாதம் 18 ஆம் திகதிய உதயன் நாளேட்டில் முற்பக்கத்தில் ''அவசியப் பொருள்களுக்கு செயற்கைத் தட்டுப்பாடு! வர்த்தகர்கள் விஷமத்தனம்'' என்ற தலைப்பின் கீழ் பிரசுரமாகிய செய்தியின்படி சீனி, மாவு, உட்பட எந்த அத்தியாவசியப் பொருள்களுக்கும் தட்டுப்பாடு இல்லை எனவும், அப்பொருள்கள் போதியளவு கையிருப்பில் உள்ளன எனவும், யாழ். செயலகமும், வர்த்தகர்கள் சங்க வட்டாரங்களும் தெரிவித்துள்ளன. மண்ணெண்ணெய் தாராளமாக இருப்பதாகவும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன யாழ். பிரிவும் தெரிவித்துள்ளது.

ஆனால் 18-08-98 அன்று காலையிலிருந்து எனது ஊராகிய கொடிகாமத்தில் கூட்டுறவுச் சங்கம் தவிர்ந்த ஏனைய தனியார் கடைகளில் மேற்படி பொருள்களை மருந்திற்கும் வாங்க முடியவில்லை. தென்மராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கத்தின் கொடிகாமம் கிளை 1 இல் மேற்படி பொருள்கள் போதியளவு கையிருப்பில் உள்ளன. ஆனால் அச்சங்கக் கிளையில் திடீரென முளைத்து நின்ற ஓர் அறிவித்தலில் இன்று (18-08-98) தொடக்கம் மறு அறிவித்தல் வரை ''உ'' ''அ'' அட்டைக்கு 5 கிலோ அரிசி 5 கிலோ மா, 2 கிலோ சீனி, 2 லீற்றர் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இதற்மைவாகக் கிளை முகாமையாளர் தனது கடமையைக் கச்சிதமாகச் செயற்படுத்தி வருகிறார். இது மிகவும் வரவேற்கத்தக்கது.

அத்தியாவசியப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கும் இந்த வேளையில் மக்களுக்காகச் சேவை செய்வதற்கென நிறுவப்பட்ட கூட்டுறவுச் சங்கம் மக்களின் நலன் கருதி (குறிப்பாக ஏழை மக்களின்) அத்தியாவசியப் பொருள்கள் தனியார் கடைகளுக்கு செல்வதைத் தடை செய்யும் நோக்குடன் இப்படி ஒரு திடீர்த் தீர்மானம் எடுத்திருப்பது முற்றிலும் சரியே. ஆனால் இத்தீர்மானம் எந்த நோக்கத்திற்காக இயற்றப்பட்டதோ அதே நோக்கத்திற்கு முரணாகவும் அமைந்துள்ளது என்பதைச் சங்க நிர்வாகம் கவனத்தில் கொள்ளாதது விசனத்திற்குரியது.

தற்போது ''அ'' ''உ'' பங்கீட்டு அட்டைகள் புதுப்பிப்பதற்காக ஏராளமானோர் கிராம அலுவலரிடம் சமர்ப்பித்தும், சமர்ப்பிக்காமலும் மீளப் பெறாமலும் இருக்கிறார்கள் என்ற உண்மையை அறிந்திருந்தும் புதிய அட்டைகளுக்கு மட்டும் தான் பொருள்கள் விநியோகிக்கப்படும் என்ற திடீர்த் தீர்மானம் பசித்திருக்கும் ஏழை மக்களின் வயிற்றில் விழும் அடியாகாதா? இது தான் மக்கள் சேவையா? கிராம அலுவலர்களின் தாமதச் செயற்பாட்டிற்காக ஏழை மக்களைப் பலிக்கடாவாக்குவது நியாயமாகுமா? இத்தகையதோர் சூழ்நிலையில் மக்கள் நலன் கருதி மாற்றுவழி ஒன்றைக் கண்டுபிடிக்க ஏன் முடியாது.

ஒவ்வொரு சங்கக் கிளையிலும் ''அ'' ''உ'' பங்கீட்டு அட்டைப் பாவனையாளர் பட்டியல் உண்டு. அதன்படி புதிய அட்டை பெறாதவர்களுக்கு அவர்களின் பெயர்களைப் பதிந்து கையொப்பம் பெற்றுக் கொண்டு முதற்றடவையாவது பொருள்களை விநியோகிப்பதில் தவறு ஏதும் உண்டா? கிராம அலுவலரைத் தேடிச் சென்று புதிய அட்டைகளைப் பெற்று வந்து பொருள்களை வாங்குமட்டும் ஏழை மக்களின் பசியை ஒத்திப்போட்டு வைக்க முடியுமா?

சம்பந்தப்பட்ட சங்க நிர்வாகம் இதைக் கவனத்திற்கெடுத்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடன் உதவ முன் வரவேண்டும்.

பொ. சர்வானந்தன்

கொடிகாமம்.

## 96 ஆம் ஆண்டு ஆசிரியர் போட்டிப் பரீட்சை

# கூடுதல் புள்ளி பெற்றவர்களுக்கு நியமனம் வழங்கப் புதிய திட்டம்

கொழும்பு, செப். 8

1996 ஆம் ஆண்டு ஆசிரியர்களைச் சேர்ப்பதற்காக நடத்தப்பட்ட பரீட்சையில் ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்களில் இதுவரை நியமனம் பெறாத தமிழ்—முஸ்லிம் இனத்தவர்களுக்கு உதவும் வகையில் கல்விச் சேவைகள் ஆணைக்குழு புதிய திட்டம் ஒன்றை அமுல் செய்யவிருக்கிறது.

பிரதேச செயலர் பிரிவுக்குள் இருப்பவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதால், தகுதிவாய்ந்த பலர் நியமனம் பெறவில்லை என்ற முறைப்பாடுகளை அடுத்து புதிய திட்டம் ஒன்று அமுலுக்குக் கொண்டுவரப்படுகிறது.

25 சதவீதமானவர்களுக்கு மாவட்ட அடிப்படையில் நியமனம் வழங்கப்படவிருக்கிறது.

மாவட்டத்தில் ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு விரைவில் அழைக்கப்படவிருக்கின்றனர் என்று கல்விச் சேவை ஆணைக்குழு அதிகாரி தெரிவித்தார்.

[இ-3]

## முக்கால் மைல் தூரம் நடக்கும் பக்தர்கள்!

வலி. மேற்கு, செப். 8

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்துக்குச் செல்லும் பக்தர்கள் சுமார் முக்கால் மைல் தூரம் நடந்துசெல்ல வேண்டும்.

ஆலய வருடாந்த உற்சவத்தையொட்டி இராணுவம் ஆலயத்துக்குச் செல்லும் அனைவரையும் பொன்னாலை பறட்டயாகுளம் பிள்ளையார் ஆலயத்துக்கு அப்பால் வாகனங்களில் செல்லவிடாது தடுப்பதனால் சகல வாகனங்களையும் அந்த இடத்திலேயே விட்டுவிட்டுச் சகலரும் சுமார் முக்கால் மைல் தூரத்தை நடந்தே கடக்கவேண்டியுள்ளது.

ஆலயத்துக்குக் கச்சேரிகளை நடத்தச்செல்லும் தவில், நாதஸ்வர இசைக் கலைஞர்களும் தமது இசைக் கருவிகளையும் சுமந்து கொண்டு நடந்து செல்வதை காணக்கூடியதாகவுள்ளது.

இம்மாதம் 12 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 13 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும், 14 ஆம் திகதி திருக்கல்யாணத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

(இ-175)

## ஐ. நா. தூதரகம் அன்பளிப்பு

வலி மேற்கு, செப். 8

வலிகாமம் மேற்குப் பகுதியைச் சேர்ந்த சுமார் 159 குடும்பங்களுக்கு அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் வீட்டுப் பாவனைப்பொருள்கள், புடைவை வகைகள் என்பவற்றை வழங்கியுள்ளது.

(இ-175)

## சிவானந்தர் பிறந்த நாள்

யாழ்ப்பாணம், செப். 8

''இமயஜோதி'' சுவாமி சிவானந்தரின் பிறந்த நாள் நிகழ்ச்சிகள் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ். திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளன. அபிஷேகம், பாதபூசை, பிரார்த்தனை என்பனவும் இடம் பெறும்.

(ஐ)

## சமூக அமைப்புகளுக்கு நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், செப். 8

இருபாலைப் பகுதியில் இயங்கும் சமூக அமைப்புகளின் புனரமைப்புக்கு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை 10 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்ய விருக்கிறது.

இருபாலை விக்கினேஸ்வரா சனசமூக நிலையம், வசந்தநிலா பாலர் பாடசாலை, முன்பள்ளி நிலையம் ஆகியவற்றைப் புனரமைக்கவே இந்த நிதி வழங்கப்படவிருப்பதாக வலி. கிழக்கு பிரதேச சபைத் தலைவர் பூ. குணசிங்கம் வசந்த நிலா பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டியில் பேசுகையில் தெரிவித்தார்.

இந்த வைபவத்தில் பலர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

(இ-3)


## பாராட்டு விழா

இணுவில் காயத்ரீபீடம்
ஸ்ரீ கண்ணகா பரமேஸ்வரி ஆலயத்தில்
12 நாள்கள் நடைபெற்ற லட்சார்ச்சனையின் போது
தேவீபாகவத தொடர் விரிவுரையாற்றிய
பிரம்மஸ்ரீ
**இ. கமலநாதசர்மா**
( யாழ். பல்கலைக்கழக மாணவன் )

அவர்கட்கு இன்று [08 – 09 – 98] செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு ஷெ ஆலய மண்டபத்தில் சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள் தலைமையில் பாராட்டு விழா நடைபெறும்.

செ. திருவிளங்கம்
ஷெ ஆலய தர்மபரிபாலகர்.

[58998]

## பிறந்தநாள் வாழ்த்து



**செல்வி ச. டிறோனி**

உடுவில் வடக்கு
சந்திரசிங்கம் (டலஸ்) ஜெனோசிலி

தம்பதிகளின் செல்வப் புதல்வி டிறோனி தனது முதலாவது பிறந்தநாளை 08. 09. 1998 செவ்வாய்க்கிழமை இன்றுஜேர்மனியில்வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அப்பா, மம்மி, ஆசை அப்பம்மா, அம்மம்மா, அம்மப்பா, துரைசிங்கப் பெரியப்பா குடும்பத்தினர், ஜெயராசிங்கப் பெரியப்பா குடும்பத்தினர், ஜெயசிங்கச் சித்தப்பா (லண்டன்) சண்முகநாதன் அங்கிள், சாந்தி அத்தை, ஜெனிற்சித்தி, யுனிதன் அங்கிள் (லண்டன்) அன்பு மச்சான்மார், குடுவின்சினி, நீலினி, நயுதினி, வியூஷா, டிபோசன் மச்சான், தனுஸ்ரன் மச்சான் மற்றும் உறவினர், நண்பர்கள் இவரை உடுவில் கண்ணகியம்மாள் அருளால் பல்லாண்டு காலம் சீருஞ் சிறப்புடன் நீடூழி வாழ வாழ்த்துகின்றனர்.

தகவல்:–
ஜெனிற்

உடுவில்.

(58885)

## தேவை

அனுபவமுள்ள
சுவீற் மேக்கர்
தேவை.
தொடர்பு கொள்ள
வேண்டிய இடம்:
லிங்கன் கிறீம் ஹவுஸ்
119, கஸ்தூரியார்வீதி,
யாழ்ப்பாணம்

(58984)

## S. T. C.

கல்வி நிலையம்
சுன்னாகம்
(இலங்கை வங்கி முன்பாக )

SPOKEN ENGLISH
by
BRITTO

ஆரம்பம்: 08-09-98

வழமையான நேரம்
செவ், வியா: 8-00 மணி

[illegible]

## NEW SCIENCE HALL

கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

PURE & APPLIED

A/L 99 Day Class
ஆரம்பம்: 09 - 09 - 98 [ புதன் 10 00 a. m ]

A/L 99 Paper Class
ஆரம்பம்: 10 - 09 - 98 [வியாழன் 6: 30 a. m.]

A. பத்மநாதன்.

[58981]

## முதலாம் ஆண்டு நினைவஞ்லி

அன்னை மடியில் 08 – 03 – 1932



ஆண்டவன் பிடியில் 19 – 09 – 1997

திருமதி
**பரமலிங்கம் மகேஸ்வரி**

அன்னையே உமைப்பிரிந்து ஆறாத்துயரில்
–வாடுகின்றோம்
அணையாத தீபமாய் எமக்காதரவாய் இருந்தீரே!
இணையில்லா எம் தாயே இதயத்தில் நீர் என்றும்
அணையாத தீபமே! உம் ஆத்மா சாந்தி பெற
ஆண்டவனை இறைஞ்சுகிறோம்.

-குடும்பத்தினர்

துணவி,
வட்டுக்கோட்டை.

(சி/4754)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு:
14 - 10 - 1923

இறப்பு
20 - 8 - 1997



**தம்பிப்பிள்ளை தம்பிராசா**

(உரிமையாளர், தம்பிராசா எரிபொருள் விற்பனை நிலையம், நல்லூர் சந்தை, யாழ்ப்பாணம்)

திதி: 8 – 9 – 98

அன்றும் இன்றும் என்றும் எம்
நெஞ்சில் நின்று நின்று நினைவில்
நிறைந்திட்ட எங்கள் குடும்பத்தலைவா!
பூதவுடல் நீத்துப் புகழுடம்பு பெற்றுவிட்டீர்
வேதனையால் நாங்கள்
வெதும்புகின்றோம் — மேதினியில்
ஏதிலியராக ஏங்கித் தவிக்கின்றோம்
என்செய்வோம் ஐயா இனி?

இல. 142,
அடியபாதம் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

மகள்: பேபிசரோஜா
மருமகன்: க.தேவகுருநாதன்
மற்றும் பிள்ளைகள்

(58970)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## நழுவும் போக்கு!

அணிசேரா நாடுகளின் தலைவர்களுக்கு அனுப்பிய மகஜர் மூலம், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் தாம் தயார் என்பதனை தமிழீழ விடுதலைப் புலிகள் உறுதிப்படுத்தி உள்ளனர்.

அதற்கும் மேலாக, விடுதலைப்புலிகளின் அரசியற் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் கொழும்பிலிருந்து வெளிவரும் ''சண்டே லீடர்'' ஆங்கிலப் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி அவர்களின் நிலையைத்தெளிவுபடுத்துகிறது.

இனப்பிரச்சினைக்குப் போர் தீர்வு அல்ல; அரசியல் தீர்வுதான் உகந்தது என்று நாம் கருதுகிறோம். அரசாங்கத்துக்கு எம்மீதும் எமக்கு அரசாங்கம் மீதும நம்பிக்கை இல்லாததால் மூன்றாந் தரப்பு மத்தியஸ்தம் தேவை — என்று விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் கூறியுள்ளார்.

போரினால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது; அரசியல் தீர்வே காணப்பட வேண்டும் என்பதே அரசின் நிலைப்பாடு என்று அமைச்சர்கள் அடிக்கடி கூறுகின்றார்கள். அதுமட்டுமா?

விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கும் இணக்கம் காண்பதற்கும் அரசு விருப்பமாகவே உள்ளது என்றும்சொல்லிவருகிறார்கள்.

ஆனால், பேச்சுப்பல்லக்குத் தம்பி கால்நடை என்பதுபோல, நடைமுறையில் பேச்சு வார்த்தையைத் தொடங்குவதற்கான சூழ்நிலையை உருவாக்குவதற்குத் தயங்குகிறார்கள்; தாமதிக்கிறார்கள்; வேண்டுமென்றே இழுத்தடிக்கிறார்கள். அவ்வப் போது ஏதோ ஒரு காரணத்தைக் கூறி நழுவி விடுகிறார்கள்.

அரசாங்கத்தின் நடத்தைகள் எல்லாம் பேச்சு வார்த்தையைத் தவிர்ப்பது–போரைத் தொடர்வது -என்ற நோக்கம் கொண்டவைகளாகவே உள்ளன.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஒத்துழைக்குமாறு உலக நாடுகள் ஐக்கிய தேசியக்கட்சி மீதே அழுத்தம் போட வேண்டும்; அடிப்படை விடயங்களில் ஐக்கிய தேசியக்கட்சி இணங்கிய பின்னரே விடுதலைப் புலிகளுடன் பேசுவோம்; நிபந்தனைகளுடனேயே பேச்சு நடத்த முடியும்; என்று நழுவி விடும் நிலைப்பாட்டையே அரசு கைக்கொள்கிறது.

அனேகமாக அடுத்த ஜனவரி மாதத்தில் ஜனாதிபதி தேர்தலை நடத்த வேண்டும் என்ற கணக்குப் போட்டு அரசு செயற்படுகிறது. அதற்கு முன்னர் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தொடங்குவது தீக்குள் விரலை வைக்கும் கதியாகி விடுமோ என்று உள்ளூர அஞ்சுகிறது.

போரைத் தொடர்ந்து ஒரு சிறிய வெற்றி பெற்றாலும் அதனைப் பெரிதாகக் காட்டிச் சிங்கள மக்களின் வாக்குகளைப் பெறலாம் என்பது அரசின் கருத்து. அதனாலேயே பேச்சுவார்த்தையில் தனக்கும் விருப்பம் உள்ளதாகக் கூறிக்கொண்டு — காட்டிக்கொண்டு — போரை நிறுத்தாது தொடர்கிறது. தேர்தல் நடைபெறும் வரை இந்த நழுவல் போக்கும் தொடரும்.

# சகல மதங்களுக்கும் தர்மத்தில்பங்கு; தர்மங்கள் கூறுவது ஒருகடவுளையே

## சாரதா சேவாச்சிரம வைபவத்தில் தமிழக சுவாமிகள்

வடமராட்சி, செப். 8

இந்து இஸ்லாம், கிறிஸ்தவம் முதலிய எல்லாச் சமயங்களுக்கும் உலக தர்மத்தில் பங்கு உண்டு. அனைத்து மதங்களிலும் சகல வகைத் தர்மங்களும் உள்ளடங்கியுள்ளன. அந்தத் தர்மங்கள் கடவுள் ஒருவர் என்றே கூறுகின்றன. அவை சொல்வதும் ஒரு கடவுளையே.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்நாடு, செங்கல்பட்டு ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் செயலாளர் வண. சுவாமி விருபக்ஷானந்தாஜி.

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதாதேவி சேவாச்சிரமத்தில் புதிய நூல் நிலையக் கட்டடத்துககு அடிக்கல்லை நட்டு வைத்து பேசுகையிலேயே அவர் இவ்வாறு சொன்னார்.

கடந்த சனிக்கிழமை மாலை மேற்படி சேவாச்சிரமத்தில் சுவாமி சித்ருபானந்தா தலைமையில் அடிக்கல் நடும் வைபவம் நடைபெற்றது. யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள மூன்று சுவாமிகளும் மங்கள வாத்தியங்கள் சகிதம் பருத்தித்துறை சிவன்கோயிலில் இருந்து ஆச்சிரமம் வரை அழைத்து வரப்பட்டனர். வழிநெடுகிலும் பூரண கும்பங்கள் வைத்து மக்கள் சுவாமிகள் மூவரையும் வரவேற்றனர்.

வண. சுவாமி விருபக்ஷானந்தாஜி தமது உரையில் மேலும் கூறியதாவது;-

5 ஆயிரம் ஆண்டுகளில் செய்யும் சாதனைகளை சுவாமி இராமகிருஷ்ணர் 12 வருடங்களில் செய்து முடித்தார். அவரது சமூக ஆன்மீகப் பணிகளினால் இன்று உலகம் முழுவதும் 160 மிஷன்கள் செயற்பட்டு வருகின்றன. 1,600 சுவாமிகள்இராமகிருஷ்ண பரமஹம்சரின் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இராமகிருஷ்ணர் விடுத்த செய்தி 1,500 ஆண்டுகளுக்கு மேலாக நிலைத்து நிற்கும். நாம் எந்தக் கடவுளுக்குப் பூசை செய்தாலும் எல்லாம் ஒரே கடவுள் என்று இராமகிருஷ்ணர் சொல்லியுள்ளார்.

இராமகிருஷ்ணரின்சீடரான சுவாமி விவேகானந்தர் உலகத்துக்கு பல தானங்களைச் செய்துள்ளார். சேவை செய்வதன் மூலமே கடவுளை அடையலாம் என்று சுவாமி விவேகானந்தர் சொல்லியுள்ளார். இங்கு ஆரம்பிக்கப்பட்டுள்ள நூலகத்தை முழுமை பெறச்செய்ய நிதி வேண்டும். அனைவரும் சிறிது சிறிதாகக் கொடுத்தேனும் நூலகத்தைப் பூர்த்தி செய்ய உதவ வேண்டும் என்றார்.

### மகிழ்ச்சி தருகிறது

இராம கிருஷ்ண மிஷனின் இலங்கைக் கிளை உப தலைவர் சுவாமி ஆத்மகணானந்தாஜி பேசுகையில் கூறியதாவது:

இன்று எங்களுக்கு ஒரு மகிழ்ச்சியான நாள். சுவாமி விவேகானந்தர் மற்றும் செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகள் போன்ற பல அனுபூதி மான்களால் இந்தப் பிரதேச மண் புனிதமடைந்துள்ளது. இந்தப் புண்ணிய பூமிக்கு நாங்கள் வருவதற்கு சாரதா அன்னை ஆலயத்தின் கும்பாபிஷேகம் காரணமாக அமைந்தது உண்மையிலேயே மகிழ்ச்சி தருகிறது.

எத்தனையோ ஆண்டுகளாக யாழ்ப்பாணத்துக்கு வர வேண்டும் என்று முயற்சித்தோம். ஒவ்வொரு சமயமும் ஏதோ ஒரு காரணத்தால் வர முடியாமல் போயிற்று. ஒரு வேளை சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜய நூற்றாண்டு விழாக் காலத்தில் வர வேண்டும் போலிருந்தது. இன்று வந்துள்ளோம். உண்மையிலேயே பெரு மகிழ்ச்சி அடைகிறோம்.

நம்முடைய சாத்திரங்களில் அடங்கியிருக்கக்கூடிய உயரிய கருத்துக்களை எல்லாம் ஒவ்வொரு வீட்டுக்கும் சொல்ல வேண்டும். அதன் மூலமாக மக்களின் வாழ்க்கையில் ஒரு மலர்ச்சி ஏற்பட வேண்டும் என சுவாமி விவேகானந்தர் கூறுவார்.

பணம், செல்வாக்கு, கல்வி இருந்தாலும் வாழ்க்கையில் அமைதி பக்தி மூலமாகத்தான் ஏற்படும். மனக் கவலையைப் போக்கி அமைதி ஏற்பட இறைவனை வழிபட வேண்டும். இறை வழிபாட்டின் மூலமே மனக் கவலையை நீக்க முடியும்.

வாழ்க்கையிலே பக்தியை எப்படி வளர்த்துக் கொள்ள முடியும் என்பதை பல நூல்கள் எடுத்துக் கூறுகின்றன. பக்தியை வளர்க்கும் கருத்துக்களை திரும்பத் திரும்ப எடுத்துக் கூற வேண்டும். இறை பக்தி பற்றி துறவிகள் எடுத்துக் கூறும் போது சக்தி பிறக்கிறது. துறவிகள் வாயிலிருந்து உண்மை வெளிவரும் போது சாஸ்திரங்களுக்கு வலிமை பிறக்கிறது.

சாஸ்திரங்களில் அடங்கியுள்ள உண்மைகளை மக்களுக்கு துறவிகள் எடுத்துக் கூறவேண்டும். இதற்காகவே துறவிகள் சங்கத்தை அமைக்க வேண்டும் என சுவாமி விவேகானந்தர் விரும்பினார்.

நூறாண்டுகளுக்கு முன்னர் சுவாமி விவேகானந்தர் யாழ்ப்பாணம் வந்தார். சுவாமி விபுலானந்தர் அனாதை இல்லம் ஒன்றை நடத்திப் பின்னர் மட்டக்களப்புக்கு எடுத்துச் சென்றுவிட்டார். இப்போது யாழ்ப்பாணத்தில் முதன் முதல் ஆச்சிரமம் இதுவாகும்.

இங்கு புதிய கோயில் ஒன்று அமைந்துள்ளது. நூலகம் ஒன்று அமையப் போகிறது. இவையெல்லாம் மக்களின் அன்பையும், ஆதரவையும் எடுத்துக் காட்டுகின்றன.

ஆச்சிரமத்தின் மூலமாக நல்ல காரியங்கள் இறைவன் அருளோடு நடக்க வேண்டும். இன்று சரித்திரத்தில் பொன்னாள். இறைவன் கருணையால் இப்பகுதி மக்களுக்கு நல்ல காலம் ஏற்பட வேண்டும். அவர்கள் வாழ்க்கையில் அமைதியும் மகிழ்ச்சியும் நிறைய வேண்டும் — என்று ஆசீர்வாதம் செய்தார்.

### அன்பு சொரிந்த மக்கள்

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த சுவாமி அஜராத்மானந்தாஜி பேசுகையில் கூறியாதாவது:-

சுவாமி விவேகானந்தர் விஜயம் செய்த இந்த புண்ணிய பூமிக்கு நாம் வந்துள்ளதையிட்டு மிக மகிழ்ச்சியடைகிறோம். சுவாமி விவேகானந்தர் பல நாள்கள் தங்கியிருக்கக் கூடிய பாக்கியத்தைப் பெற்றது இந்தப் பூமி. அவருடன் கூட வந்த சீடர் ஒருவர் எழுதிய கடிதத்தில் நாங்கள் இன்னும் சில நாள்கள் யாழ்ப்பாணத்தில் இருந்திருந்தால் மக்களின் அன்பினாலேயே கொல்லப்பட்டிருப்போம் என எழுயுள்ளார். அத்தகைய அன்பைச் சொரிந்த பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்கள் யாழ்ப்பாண மக்கள். அந்த மகானுக்கு உயர்ந்த பெருமையையும், புகழையும் அளித்த பாரம்பரியத்தைச் சேர்ந்த உங்கள் மத்தியில் சில நாள்கள் தங்கியிருப்பது குறித்து மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம்.

மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயத்தில் நான் படித்த போது சுவாமி சித்ருபானந்தா சகோதரராக அங்கு பணியாற்றியவர். அவரை நீண்ட காலமாக எனக்குத் தெரியும். அப்போதிருந்தே அன்னை சாரதா தேவி மீது பற்றுக் கொண்டவர். அன்னைக்கே தன்னை அர்ப்பணித்தவர் அவர். ஸ்ரீ இராமகிருஷ்ண சங்கத்தின ஜனனி அன்னை சாரதா தேவி அன்னையினுடைய வாழ்க்கையோடு உலகிலேயே முதன் முதல் நிகழ்ந்த நிகழ்வுகள் பல இணைக்கப்பட்டுள்ளன பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணராலேயே அனைத்து சமயப் பேருண்மைகளில் உண்மையாக, அனைத்து ஆன்மீகத்தின் உருவமாக வழிபடப் பெற்றவர் அன்னை சாரதாதேவி.

### அன்னையே பராசக்தி

கணவனே தன் மனைவியை பராசக்தியாக வழிபடுகின்ற அந்த வழிபாடுஆன்மீகச் சரித்திரத்திலே இதுவரை எங்கும் நடக்கவில்லை இராமகிருஷ்ண பரமஹம்சரின் வழிபாட்டை ஏற்றுக் கொள்கின்ற அளவுக்கு அன்னைக்கு வல்லமை இருந்தது. அடுத்தது உலகிலேயே முதன் முதலாக சந்நியாசினியுடைய ஒரு பாரம்பரியம் அன்னையின் பெயரால் தான் விளங்குகின்றது.

கணவனின் மறைவுக்குப் பின்னர் மனைவி அந்தச் சங்கத்தின் பொறுப்பை

(9 ஆம் பக்கம் பார்க்க)

# உருவிலா இறைவனை கருத்தாங்கிய கன்னிமரியாள் பிறந்ததினம் இன்று

உருவிலா இறைவனை கருவிலே கருத்தாங்கிய தாய் கன்னி மரியாளின் பிறப்பு விழாவை இன்று உலக கத்தோலிக்க திருச்சபை மகிழ்வுடன் கொண்டாடுகின்றது.

அன்பின் அன்னையாய், அரவணைக்கும் மாதாவாய், அல்லலுறுபவர்களுக்கு ஆறுதலாய் அண்டிவந்தவர்களுக்கு அடைக்கலமாய் இருகரம் நீட்டி அரவணைப்பவள் நம் அடைக்கல அன்னை.

எல்லா தேவ வரங்களையும், ஞான அழகையும் தன்னகத்தே கொண்டு உன்னத கடவுளின் ஆலயமாய், அமல உற்பவமாய், திருச்சபையின் பாதுகாவலியாக திகழும் அன்னை கன்னிமரியாள் தாழ்ச்சியின் உறைவிடமாய், எளிமையின் அணிகலமாய், கற்பின் சிகரமாய் தூயோரின் உள்ளத்தில் நிறைந்திருக்கின்றாள்.

துயர் துடைக்கும் தூயவளாய் துன்பத்தில் இன்பமாய், வேதனையில் ஆறுதலாய், சாதனையில் சரித்திரமாய் திகழ்பவள், வேளை நகர் தன்னில வேளாங்கன்னியாய், லூர்து நகரில் லூர்து மாதாவாய், மருதமடுவில் மடுமாதாவாய் நகரிற்கு ஒரு நாமம் கொண்டு கோடி அருள் பொழியும் அன்னை எம் மண்ணில மைந்தருக்கு

## பூ. வனிதா

அடைக்கலம் அளிக்கும் அடைக்கல அன்னையாக அருள்புரிகிறாள். இன்று கன்னி மரியாளின் பிறப்பு விழாவுடன் அடைக்கல அன்னையின் மக்கள் தம் ஆலயப் பெருவிழாவையும் கொண்டாடுவது இரட்டிப்பு மகிழ்ச்சியாகும்.

இன்று விழாக்கோலம் பூண்டு நிற்கும் அடைக்கல அன்னை ஆலயம் திருச்சபை வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்ததும், வேத விசுவாசம் வளரக் காரணமானதும் யாழ். நகரின் மிகப் பெரிய ஆலயங்களில் ஒன்றாகவும் திகழ்கின்றது.

''இதோ ஆண்டவருடைய அடிமை, உமது வார்த்தையின் படியே ஆகட்டும்'' என்று தன்னை முழுவதும் இறைவனின் சித்தத்திற்கு கையளித்த கன்னிமரி போல எமது வாழ்விலும் இறை சித்தத்திற்கு எம்மை முழுமையாக கையளிக்க வேண்டும்.

''அவர் உங்களுக்கு சொல்லுவதையெல்லாம் செய்யுங்கள்'' என்று கூறிய அன்னை மரியாளுக்கு பணிந்து வாழ்வோம், அவளின் தாழ்ச்சியை, எளிமையை, அரவணைக்கும் அன்பை, இரக்கத்தை கீழ்படிதலை எமது வாழ்வின் ஏணிப்படிகள் ஆக்குவோம். நாமும் இறைவன் உறையும் இவ்வுடம்பு ஆவோம். அன்னை மரியின் பரிந்துரை எமக்கு பாதுகாப்பு அளிக்கும். அவளது பிறப்பு விழா எம்மில் அமைதியை வளர்க்கட்டும் அவளது ஆசீர் என்றும் நிறைவுடன் எம்மீது பொழியட்டும்.

ஆறுகுடம் தண்ணீரை அரிய இரசமாக்கி அற்புதம் செய்த உந்தன் ஆருயிர் நேச மைந்தன்.

ஆசியை அடைந்து நாம் மாசின்றி வாழ்ந்திட அனுக்கிரகம் புரிவாய் அமல உற்பவ பாதே அடைக்கலமே அடைக்கலமே தாயே அடியாரை அம்புவியில் ஆதரித்தாளுவாயே! ★

### நாளை

ஆவணி - 24

புதன்கிழமை

திதி: திருதியை முற்பகல் 10.57 வரை.

நட்சத்திரம்: ரேவதி பிற்பகல் 02.10 வரை.

சுபநேரம்: 04.33 -06 03

ராகுகாலம்: 12 03 - 01.33

(பகலுக்கும் இரவுக்கும் பழையநேரப்படி)

### உதயவாக்கு

நல்ல பெண் ஒருத்தியின் முழுவாழ்க்கையும் அன்பை விளக்கும் சரித்திரமாக அமைந்துவிடுகிறது.

— கிரீவ்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மணி புதைகுழிப் பகுதியை

# வீடியோப் படமாக்க வேண்டும்!

## ஜனாதிபதிக்கு மக்கள் சக்திக்குழு செய்தி

யாழ்ப்பாணம், செப். 8

செம்மணி மனித புதைகுழி தொடர்பான தகவலை வெளியிட்ட கோப்பரல் சோமரத்ன ராஜபக்ஷவின் உயிருக்கு ஆபத்து இருப்பதாக தெரிவிக்கப்படுவதால் செம்மணிப் பகுதியை வீடியோப் படமாக்க வேண்டும்.

இப்படி மக்கள் சக்திக் கழகம் ஜனாதிபதியைக் கேட்டுள்ளது.

ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள அவசர செய்தியிலேயே மேற்கண்டவாறுகேட்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தற்போது உருவாகியுள்ள நிலைமைகள் கிருஷாந்தி கொலை வழக்கின் முதலாவது குற்றவாளியான சோமரத்தின ராஜபக்ஷவின் உயிருக்கு ஆபத்து இருப்பதைத் தெளிவாக்குகின்றன.

அவரை இங்கு கூட்டிவந்து புதைகுழியை அடையாளம் காட்டுவது தாமதமடைவதற்கு அவரைகொண்டு வருவதில் உள்ளபாதுகாப்புப் பிரச்சினையே காரணம் எனத்தோன்றுகிறது.

இந்த விவகாரத்தை மூடி மறைப்பதற்காக, ராஜபக்ஷவின் உயிருக்கு ஏதாவது அசம்பாவிதம் நிகழக் கூடுமென்ற ஓர் அச்சம் மக்கள் மத்தியில் பரவலாக நிலவுகின்றது.

ஆகவே கீழ்வரும் நடவடிக்கைகளை உடன் எடுக்க வேண்டுமெனக் கோருகிறோம்.

★ செம்மணி வீதி—கண்டி வீதி சந்தியில் இருந்து ஒன்றரைக் கிலோ மீற்றர் சுற்று வட்டம் முழுவதையும் வீடியோப் படமாக்க வேண்டும்.

★ ராஜபக்ஷவுக்கு இந்த வீடியோவைக் காண்பித்து புதைகுழி இருக்கும் இடத்தை அடையாளம் காட்டச் சொல்ல வேண்டும்.

அவர் அடையாளம் காட்டுவதையும்வீடியோப்படமாக்க வேண்டும். ராஜபக்ஷவுக்கு வீடியோ படம் காட்டுவதையும், அவர் புதைகுழி இருக்கும் இடத்தை அடையாளம் காட்டுவதையும், அவரது வாக்குமூலத்தையும் வீடியோப் படமாக பதிவு செய்யவேண்டும்.

புதைகுழி தொடர்பாக தகவலை வெளியிட்டவர் புதைகுழியை அடையாளம் காட்டவில்லை என்ற காரணத்துக்காக இந்த விடயம் இழுத்தடிக்கப்படுவதற்கும் தாமதிக்கப்படுவதற்கும் பதிலாக இந்த வீடியோப் பதிவு முறை மூலம் விசாரணைகள் தொடரப்படலாம் என நாம் நம்புகிறோம்—

இப்படி அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-3-17)

# இராமகிருஷ்ண மிஷன் குழுவினர் புதன், வியாழன் நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், செப். 8

சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜய நூற்றாண்டை முன்னிட்டு யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள சென்னை செங்கற்பட்டு இராமகிருஷ்ண மிஷன் செயலாளர்சுவாமி விருபக்ஷானந்தஜி தலைமையிலான குழுவினர் குடா நாட்டின் பல பகுதிகளுக்கும் விஜயம் மேற்கொண்டுள்ளனர்.

சுவாமிகள்குழுவினர் நாளை புதன்கிழமை கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயத்தின் வைரவிழாவை முன்னிட்டு முற்பகல் 9 மணிமுதல் பிற்பகல் 1 மணிவரை மேற்படி வித்தியாலயத்திற் தங்கியிருப்பர்.

நாளை புதன்கிழமை மாலை 3 மணிக்கு சுவாமிகள் குழுவினர் நல்லை ஆதீனத்துக்கு விஜயம் செய்யவுள்ளனர். நல்லூர் கந்தசுவாமி கோயில் வாயிலிலிருந்து மங்கள வாத்தியத்துடனும், ஆதீன மாணவ, மாணவிகளின் அணிவகுப்புடனும் ஆதீனத்துக்கு அழைத்துவரப்படுவர். இவர்களை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் வரவேற்று கௌரவிப்பார்கள், நல்லை ஆதீனத்தில் சுவாமிகளின் ஆன்மீக சொற்பொழிவும், ஆசிவழங்கலும் இடம்பெறும்.

நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணி முதல் 11 மணி வரை வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையிலும், முற்பகல் 11-30 மணி முதல் 1-00 மணி வரை இராமநாதன் கல்லூரியிலும், பிற்பகல் 2-30 மணி முதல் 3-30 மணி வரை உரும்பிராயிலும் தங்கியிருந்து ஆசி வழங்குவார்கள். பிற்பகல் 4 மணிக்கு யாழ்ப்பாணத்தில் பிரியாவிடை வைபவமும் இடம் பெறவுள்ளது.

எதிர்வரும் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை இவர்கள் யாழ்ப்பாண விஜயத்தை முடித்துக் கொண்டு கொழும்பு திரும்புவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

(இ-8-15-173)

# நல்லெண்ணெயைக் கூட விட்டுவைக்காத திருடர்!

சுதுமலை, செப். 8

ஆனைக்கோட்டைச் சந்தியில் உள்ள கடை ஒன்று உடைக்கப்பட்டு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான நல்லெண்ணெய் திருடப்பட்டுள்ளது.

அத்துடன் கடையில் இருந்த இளநீர், வாழைப்பழம் ஆகியனவும் திருடப்பட்டுள்ளன.

இந்தக் கடைக்குச் சமீபமாக உள்ள கடை ஒன்றையும் உடைத்துத் திருட முயன்றசமயம் அங்கிருந்தவர்கள் சத்தமிடவே திருட்டுக் கோஷ்டி தப்பி ஓடிவிட்டது.

ஆனைக்கோட்டைப்பகுதியில் குருசுமதவடியில் உள்ள வீடு ஒன்றில் உரிமையாளர்கள் கதவைப் பூட்ட முன்னர் உள்ளே சென்று பதுங்கியிருந்த திருடன் ஒருவன் வீட்டுக்காரர் நித்திரையானதும், பெண்ணின் சங்கிலியை அறுக்க முற்பட்டான் என்றும் —

பெண் சத்தமிடவே அவன் தப்பி விட்டதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

(ஐ-139)

# கண்பார்வை சீரடைந்த முதியோர் மற்றவர்களுக்கு உதவ வேண்டும்

## கண்ணாடி வழங்கும் வைபவத்தில் உரை

யாழ்ப்பாணம் செப். 8

முதுமை வந்ததும் பெரும்பான்மையோருக்கு விழிப்புலனில் குறைவு ஏற்படும். பிறரது உதவி இன்றி எனது கடமைகளை என்னால் தனியச் செய்ய முடியவில்லையே? எத்தனை நாள்களாகப் பிறருக்குப் பாரமாக வாழ்வது? என அவர்கள் துயரமடைவார்கள். இவர்கள் தங்கள் கருமங்களை தாமே செய்யவும் தங்கள் பிள்ளைகளுக்கும் ஏனையோருக்கும தங்களால் இயன்ற உதவிகளைச் செய்து மனத்திருப்தி அடையவுமே இன்று இலவச மூக்குக் கண்ணாடியை அவர்களுக்கு வழங்குகின்றோம். மனத்திருப்தி நோய்களைத் தூர வைக்கும்.

ஊனமுற்றோர் புனர்வாழ்வு சங்கத் தலைவர் வைத்திய கலாநிதி என். சிவராஜா மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். ஊனமுற்றோர் புனர் வாழ்வுக் கழகத்தின் உதவியுடன் கொக்குவில் லயன்ஸ் கழகம் கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் கழகத் தலைவர் லயன் இ. செல்வநாதன் தலைமையில் நடைபெற்ற இலவசமாக கண்ணாடி வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு இவர் உரையாற்றினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் சமுதாயத்தில் சேர்க்கப்பட்ட நன்கொடை நிதியிலிருந்தே இன்று இருநூற்றுக்கும் மேற்பட்டோருக்கு கண்ணாடிகளை வழங்குகின்றோம். எந்தச் சமுதாயம் இவர்களுக்கு உதவி புரிந்ததோ அந்தச் சமுதாயத்தின் நன்மை கருதி இவர்களும் உதவி புரிய வேண்டும்.

உங்களுக்கு இன்று வழங்கப்பட்ட மூக்குக்கண்ணாடிகளின் துணை கொண்டு நற்சிந்தனைகளை வளர்க்கக் கூடிய கதைகளை வாசிக்க வேண்டும். ஆலயங்களுக்கோ அல்லது பொது வாசிகசாலைகளுக்கோ சிறுவர்களை அழைத்து அறநெறிச் சிந்தனைகளையும், சமய சன்மார்க்க நெறிகளையும், அன்பு, கருணை, நற்பண்புகள் போன்றவற்றையும் போதிக்க வேண்டும்.

எதிர்கால சந்ததியினரை நல்லவர்களாக வளர்த்தால் நாடே நலம் பெறும். இன்றேல் நாம் அனைவரும் ஒன்றாக அழிந்து விடுவோம். பிள்ளைகளை நல்ல முறையில் நல்லவர்களாக வாழ வைப்பதற்கு முதியோர்கள் ஒன்று பட்டு உழைக்க வேண்டும் என்றார்.

லயனஸ் கழக பிராந்தியத் தலைவர் லயன் எஸ். எஸ், அருளானந்தம், இணைப்பாளர் லயன் ஏ. தங்கேஸ்வரன் ஆகியோரும் சிறப்புரையாற்றினார்கள்.

திருமதி சிவராஜா, ஊ.மு.பு.ச செயலாளர் கா. கணேசதாசன் மற்றும் லயன்ஸ் பிரமுகர்கள் [illegible] கண்ணாடிகளை வழங்கி நிகழ்வை ஆரம்பித்தனர். [இ-17]

# யாழ். அலுவலகத்துக்கு தனிச்சிங்களத்தில் கடிதம்

யாழ். குடாநாட்டில் உள்ள பெரும்பாலான அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் ஆகியனவற்றுக்கு கொழும்புத் தலைமைச் செயலகங்களிலிருந்து அனுப்பப்படும் கடிதங்கள் மற்றும் சுற்றறிக்கைகள் யாவும் தனிச்சிங்களத்தில் அனுப்பி வைக்கப்படுகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடிதங்கள் மற்றும் சுற்றறிக்கைகள் தனிச்சிங்களத்தில் தொடர்ந்து வருவதால் இங்கு பணியாற்றும் ஊழியர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் எனக் கூறப்படுகிறது.

அரச கரும மொழிச் சட்டத்துக்கு அமையச் சிங்கள மொழியில் அனுப்பப்படும் கடிதங்கள் மற்றும் சுற்றறிக்கைகளுக்கு தமிழ் மொழி பெயர்ப்பு இணைக்கப்படுவதில்லை என வடபகுதி ஊழியர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

கொழும்புத் தலைமைச் செயலகங்களில் அனேக பணிமனைகளில் தமிழர்நியமனம் செய்யப்படாமையும், தலைமையகங்களில் பணியாற்றிய சில தமிழ் உயரதிகாரிகள் வெளிநாடுகளுக்கு சென்றமையும் தமிழ் மொழி பெயர்ப்பு இணைக்கப்படாமைக்கு காரணம் எனக் கூறப்படுகிறது.

[இ-30]

# ஆங்கில இலக்கியங்களின் தேர்வு நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், செப். 8

இலங்கையில் கடந்த ஐம்பது ஆண்டு காலத்தில் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட இலக்கியங்களின் தேர்வு நூல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. அந்தநூலில் தமிழர்களான நான்கு எழுத்தாளர்களின் ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன.

கடந்த ஐம்பதாண்டு காலத்தில் எழுதப்பட்ட ஆங்கில இலக்கியங்களில் தெரிவு செய்யப்பட்ட ஆக்கங்களைக் கொண்டே இந்த நூல் வெளியிடப்பட்டது,

கலாசாரத் திணைக்களத்தின் ஆங்கிலப் பிரிவினரால் வெளியிடப்பட்ட இந்த நூலை ஆக்குவதற்கு ஆங்கில இலக்கிய விமர்சகரான களனிப் பல்கலைக்கழக மூத்த ஆங்கிலப் பேராசிரியர் குணதிலக்க பொறுப்பாக இருந்துள்ளார்.

மலையகக் கவிஞரான சி. வி. வேலுப்பிள்ளையின் 'தேயிலைத் தோட்டத்திலே' என்ற நெடுங்கவிதையின் ஒரு பகுதியும் —

சிறுகதை நாவலாசிரியரான ராஜா புரொக்டரின் 'கள்ளத் தோணி' நாவலின் ஒரு பகுதி, சிறுகதை ஆசிரியரான அழகு சுப்பிரமணியத்தின் 'கூலிக்கு மாரடிப் போர்' என்ற சிறுகதை, எழுத்தாளர் சாந்தன் எழுதிய 'அவரவர் உலகம்' என்ற சிறுகதை ஆகியவையே இந்த நூலில் இடம்பெற்றுள்ளன.

(இ-9)

# கூடிய விலையில் பொருள் விற்பனை

வலிவடக்கு, செப். 8

யாழ். மாவட்டத்திற்கு நுகர்ச்சியாளர் கூட்டுறவுச் சங்கத்தினரால் கப்பல் கட்டணமின்றி எடுத்து வரப்படும் பொருள்களும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினால் கூடிய விலைக்கு விற்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நுகர்ச்சியாளர் கூட்டுறவுச் சங்கம் வழங்கும் பொருள்கள் ஒருவாரகாலத்திற்கு குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுவதாகவும்— பின்னர் விலை அதிகரிப்பு செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுவதாகவும்—

குறிப்பாக அங்கர், உள்ளி போன்ற பொருள்கள் இவ்வாறு விற்பனை செய்யப்படுவதாகவும்— தெரிவிக்கப்படுகின்றன.

(இ-86)

# யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு ஒக். 4இல்

## ஏற்பாடுகள் துரிதம்

யாழ்ப்பாணம், செப். 8

யாழ் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பை அடுத்த மாதம் 4ஆம் திகதி சிறப்பாக நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பட்டமளிப்பையொட்டி பல்கலைக்கழகத்தில் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை பட்டமளிப்புக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறார்.

பட்டம் பெற விருப்பவர்கள் இதுவரை விண்ணப்பம் அனுப்பாவிட்டால் உடன் அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது.

(இ-3)

# எச்.என்.டி.ஏ. மாணவர் இறுதிப் பரீட்சை 21 இல்

உயர் தேசியக் கணக்கியல் டிப்ளோமா (எச்.என்.டி.ஏ) மாணவர்களுக்கான நான்காம் ஆண்டு—இறுதி—பரீட்சைகள் எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் ஆரம்பமாகி நடைபெற உள்ளன.

இந்த எச். என். டி. ஏ. மாணவர்களுக்கான விரிவுரைகள் 1996 ஆம் ஆண்டுடன் முடிவடைந்த நிலையிலும் இதுவரையில் அவர்களுக்கான இறுதிப் பரீட்சைகள் நடைபெறாமல் இருந்தன.

பரீட்சைகளை விரைவாக நடத்தக்கோரி 14 மாணவர்கள் கையொப்பம் இட்டு மகஜர் ஒன்றினை ஜனவரி மாதம் 27 ஆம்திகதி பரீட்சை ஆணையாளருக்கு அனுப்பி வைத்திருந்தனர். அந்த மகஜரின் பிரதிகளை ஜனாதிபதி, உயர் கல்வி அமைச்சர், யாழ், மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோருக்கும் அனுப்பி வைத்திருந்தனர்.

இதனையடுத்து மேற்படி பரீட்சையை 21 ஆம் திகதி முதல் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார். இந்தப் பரீட்சை இந்த ஆண்டு மட்டும்— ஒருமுறை மட்டும் — நடைபெறும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

[இ-9]

# கலை ஒளி விளை. கழகம்

ஆனைக்கோட்டை முள்ளி கிராமத்தில் "கலை ஒளி" விளையாட்டுக்கழகம் என்ற பெயரில் புதிய விளையாட்டுக்கழகம்ஆனைக்கோட்டை கிராமசேவையாளர் ச. சந்திரராசாவினால் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

(இ-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமகிருஷ்ண மிஷன் குழுவினருக்கு

# நேற்று கல்வியங்காட்டில் வரவேற்பு

யாழ்ப்பாணம், செப். 8 ஆறு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு யாழ். வந்துள்ள சென்னை செங்கலபட்டு ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் செயலாளர் ஸ்ரீமத் சுவாமி விருபாக்ஷானந்த ஜி தலைமையிலான சுவாமிகள் குழுவினருக்கு நேற்று திருநெல்வேலியில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

கடந்த 5 ஆம் திகதி பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த சுவாமிகள் குழுவினர் அங்கு இடம்பெற்ற சமய நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்டு நேற்றுக்காலை 9 மணியளவில் வாகனம் மூலம் கல்வியங்காட்டுச் சந்தியை வந்தடைந்தனர்.

அங்கு சமயப்பெரியார்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் பலரும் கூடி நின்று சுவாமிகளை வரவேற்றனர்.

தொடர்ந்து கல்வியங்காட்டுச்சந்தியில்உள்ள வைரவர் ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூசைகளில் சுவாமிகள் கலந்து கொண்டனர். பின்னர் அங்கிருந்து ஆடிய பாதம் வீதி வழியாக மங்கள வாத்தியங்கள் இசைக்க, பெரியபுலம் மகா வித்தியாலய மாணவ, மாணவியர்களின் கீழைத்தேய பாண்ட் வாத்தியம் ஒலிக்க சுவாமிகள் அழைத்து வரப்பட்டனர்.

வீதிகளில் பொதுமக்கள் பலரும் பூரண கும்பம் வைத்து, மலர் மாலை அணிவித்து சுவாமிகளை வரவேற்றனர்.

தொடர்ந்து திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயத்தில் நடைபெற்ற சுவாமி விவேகானந்தரின் சிலைத் திறப்பு விழாவிலும், பொதுக்கூட்டத்திலும சுவாமிகள் குழுவினர் கலந்து கொண்டனர்.

சுவாமி ஸ்ரீமத் விருபாக்ஷானந்தஜி சுவாமி விவேகானந்தரின் சிலையைத் திறந்து வைத்தார். பின்னர் இராமகிருஷ்ணாலய இயக்குநர் இ. ராஜா மகேந்திரசிங்கம் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

பொதுகூட்டத்தில் சுவாமி ஸ்ரீமத் விருபாக்ஷானந்தஜி, ஆத்மகணானந்தாஜி மற்றும் சுவாமி அஜராத்மானந்தாஜி, சிவத்தமிழ்ச்செல்வி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீ ல ஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியசுவாமிகள் ஆகியோர் உரையாற்றினர்.

பின்னர் நாட்டில் அமைதியும், சமாதானமும் நிலவ வேண்டி சுவாமி ஆத்மகணானந்தாஜி தலைமையில் விசேட ஹோமம், வழிபாடு நடத்தப்பட்டது. மேற்படி வைபவத்தில் கலந்து கொண்ட யாவருக்கும் இராமகிருஷ்ணாலய நிர்வாகத்தினரால் அன்ன தானம் வழங்கப்பட்டது.

தொடர்ந்து இராமகிருஷ்ணாலயத்தில் நடைபெற்ற சிலைத்திறப்பு விழாவில் பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர்.

பின்னர் சுவாமிகள் குழுவினர் யாழ். பல்கலைக்கழகத்துக்குச் சென்று கைலாசபதி கலை அரங்கில் விசேட சமய சொற்பொழிவாற்றினர்.

யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, கலைப்பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள் சுவாமிகளை வரவேற்றனர்.

(ஐ-7)


# C. C. A.

## கலை, வர்த்தகக் கல்லூரி

வெலிங்டன் சந்தி - யாழ்ப்பாணம்.

## A/L 99 DAY CLASSES

**ஆரம்பம்: 09-09-98 புதன் காலை 9.00 மணி**

| | |
|---|---|
| பொருளியல்: | திரு. சண் |
| கணக்கீடு: | திரு. கொலின்ஸ்<br>திரு. நித்தி |
| வணிகக்கல்வி: | திரு. முரளி<br>பிரபல ஆசிரியர் |
| புள்ளிவிவரவியல்: | திரு. திரிகரன் |
| அளவையியல்: | திரு. சயந்தன் |
| புவியியல்: | திரு. மனோரஞ்சன் |
| தமிழ் / இந்துநாகரிகம்: | பிரபல ஆசிரியர் |
| நாடகமும் அரங்கியலும்: | திரு. ஸ்ரீகந்தவேள் |

குறிப்பு: மாணவர் தொகை வரையறுக்கப்பட்டுள்ளது. அனுமதிக்கு முந்துங்கள். (59018)


# OBITUARY

## Dr. W.R. HOLMES

We do hereby inform friends and students of Jaffna College that Dr W R Holmes died on 4th September 1998. He met with a bad accident while driving his car.

He served Jaffna College as a Missionary and Professor of History from 1947 to 1980. He wrote the book "Jaffna 1980".


We at Jaffna College thank God for his life and witeness. We express our condolence to his wife and children.

May his soul rest in peace.

Principal, Staff and Students of
Jaffna College.

(C/4793)

# 31 ஆம் நாள் நினைவலைகள்



## கந்தையா ஆறுமுகம்

பிறப்பு 07-05-1928 இறப்பு 09-08-1998

அன்பின் ஐயா! பாசத்தின் சிகரமே, பண்பின் உறைவிடமே, எமது குடும்பத்தின் குலவிளக்கே, எழுத்தறிவிக்கும் ஆசானாக்கினாய் ஒருவனை மற்றவர் போற்றும் நற்பிரசையாக்கினாய் எமை. நாள்கள் முப்பத்தொன்று சென்றாலும் தங்களின் பிரிவு எம் இதயத்தை வாட்டுதையா! இன்னும் நூறாண்டு சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் இதயத்தில் வாழுமையா; உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

—குடும்பத்தினர்.

பூவோடை,
கொற்றாவத்தை.

(59020)

# சாரணர் கூட்டம்

யாழ். மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தின் ஆதரவில் சாரண, குருளைச் சாரணத் தலைவர்களுக்கான முக்கிய கூட்டம் யாழ். மாவட்ட [illegible] இராசசிங்கம் தலைமையில் [illegible] யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ஐ)

# வீதி திருத்தக் கோரிக்கை

சாவகச்சேரி, செப். 8

சாவகச்சேரி பெருங்குளம் சந்தியிலிருந்து மட்டுவில் மகாவித்தியாலயம் வரையான கல்வயல் வீதியும் மட்டுவில் மகாவித்தியாலயத்திலிருந்து மட்டுவில் தெற்கு கல்வத்தி சிவன் கோயில் வரையான வீதியும் — நீண்டகாலமாக திருத்தப்படாது பாதசாரிகள் பிரயாணம் செய்ய முடியாத நிலையில் காணப்படுகின்றன.

இந்த வீதிகளைத் திருத்துவதற்காக வீதிகளின் இருமருங்கிலும் கற்கள் குவிக்கப்பட்டு ஒருவருடத்துக்கு மேலாகி விட்டது.

இந்த கற்குவியல்கள் வீதிப் போக்குவரத்துக்கு இடைஞ்சல்களைத் தோற்றுவிக்கின்றன. (இ-31)

சகல :. (ஏழாம் பக்கத் தொடர்)

எடுத்து அந்த ஆத்மீகப் பாரம்பரியத்துக்கு தலைமை வகிக்கின்ற நிகழ்வுகூட உலகத்தில் எந்த மகானுடைய சரித்திரத்திலும் நாம் பார்க்க முடியாத ஒன்று.

சாரதாதேவி இராமகிருஷ்ண சங்கத்தின் ஜனனியாக விளங்கி லட்சோப லட்சம் மக்களுக்கு ஆன்மீக ஆறுதல் அளித்துள்ளார். சக்தியின் அவதாரம் அன்னை சாரதாதேவி.

இந்த ஆச்சிரமம் யாழ்ப்பாணத்திலுள்ள அனைத்து மக்களுக்கும் ஆன்மீக தானத்தை வழங்குகின்ற மத்திய நிலையமாக விளங்க வேண்டும். உலகத்திலே நூற்றுக்கு மேற்பட்ட இராமகிருஷ்ண மிஷன் கிளைகள் உண்டு. எதிர்காலத்தில் இங்கும் ஒரு கிளை வரலாம் — என்று சொன்னார்.

# மரண அறிவித்தல்கள்

## மெலிட்டா ஜோசப்

யாழ்ப்பாணம் இல. 15, கதிர்றல் வீதியை இருப்பிடமாகவும், 106 சின்னக்கடை, மன்னாரைத் தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மெலிட்டா ஜோசப் அவர்கள் 07-09-98 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற இம்மானுவேல் ஜோசப்பின் அன்பு மனைவியும், திருமதி இராணி இராஜகோன் (மன்னார்), திருமதி ரஞ்சிதமலர் பிரான்சிஸ் (கொழும்பு), திரு. மகேந்திரன் (கொழும்பு), காலஞ்சென்ற அருளேந்திரன் (மன்னார்), இராஜேந்திரன (யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற திருமதி சாந்தி ஏபிரகாம் (யாழ்ப்பாணம்), திரு. பாலேந்திரன் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 8-9-98 இன்று காலை 10 மணியளவில் மன்னாரில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
இராஜேந்திரன், பாலேந்திரன்
(பிள்ளைகள்)

இல. 8A, கோவில் வீதி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

[59020]

## கனகசபை சபாரெட்ணம்

(ஓய்வுபெற்ற தபால் ஊழியர்)

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 7 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற தபால் ஊழியர் கனகசபை சபாரெட்ணம் 06-09-98 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை—இராமாச்சிப்பிள்ளை ஆகியோரின் அருமை மகனும், காலஞ்சென்ற நாகநாதபிள்ளை—விசாலாட்சி ஆகியோரின் மருமகனும், தங்கலெட்சுமியின் அன்புக் கணவரும், சிவபாலசிங்கம் (ஜேர்மனி), சிவசக்திவேல் (ஜேர்மனி), சிவயோகவதனி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், பூங்குழலி (ஜேர்மனி), தவச்செல்வி (ஜேர்மனி), குணாளன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற இராசம்மா, காராளசிங்கம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), காலஞ்சென்ற டாக்டர் நணக்ரத்தினம், முத்தம்மா ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற பாலசிங்கம் (உதவிச் சட்ட வரைஞர்), நாகம்மா, சிவலிங்கம் (வர்த்தகர்), சேனாதிராசா (பொறியியலாளர்), ஜெகதீசன் (சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்), இரத்தினபூபதி (கண்டி), பஞ்சலிங்கம் (அதிபர், யா/புங்குடுதீவு ஸ்ரீசுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்) ஆகியோரின மைத்துனரும் சசீதனின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக் கிரியைகள் நேற்று 07-09-98 திங்கட்கிழமை கொழும்பில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
நா. பஞ்சலிங்கம்
(மைத்துனர்)

2A, செட்டித்தெரு,
யாழ்ப்பாணம்.

(59024)

## திருமதி
## சின்னத்தம்பி கனகம்மா

[பவளம்] அரியாலை

பவளம் என்று அன்பாக அழைக்கப்படும் திருமதி சின்னத்தம்பி கனகம்மா காலமாகிவிட்டார்.

அன்னார் சின்னத்தம்பியின் அன்பு மனைவியும் மனோகரன் (பிரதேச செயலகம் - சண்டிலிப்பாய்), கலாநிதி, தயாநிதி ஆகியோரின் அன்புத் தாயாரும், திலகவதியின் மாமியாரும், மதீசனின் பேர்த்தியாரும், காலஞ்சென்ற இரத்தினம், கணேசன், துரைராசா மற்றும சின்னம்மா, நடேசன் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 43, மலர் மகள் வீதி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக இன்று (8-9 98) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு அரியாலை கிந்துப்பாத்தி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. மனோகரன் (சந்திரன்)
(மகன்)

43, மலர்மகள் வீதி,
அரியாலை.

(59027)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகாவைச்.,.

(முதலாம் பக்கத் தொடர்)

மையின் போது தவறு இழைத்த சிப்பாய் ஒருவருக்கு கடற்படை அதிகாரிகளினால் தண்டனை வழங்கப்பட்டது. விதிக்கப்பட்ட தண்டனையை ஏற்று செயற்படுவதற்காகக் குறிக்கப்பட்ட சிப்பாய் சென்று கொண்டிருந்த பொழுது அப்பகுதியிலுள்ள காவலரண் ஒன்றில் கடமையிலிருந்த அந்தச் சிப்பாயின் சகா ஒருவர் அவரைப் பார்த்து கேலி பேசியதுடன் அவரிடமிருந்த துப்பாக்கியை பரிசோதித்து பார்ப்பதாகக் கூறினாராம். இதனால் இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

இதனால் கோபமடைந்த — தண்டனை வழங்கப்பட்ட — சிப்பாய் தனது துப்பாக்கியால் தன்னைக் கேலி செய்தவரை சுட்டுக் கொன்றதுடன் தன்னையும் சுட்டுத் தற்கொலை செய்து கொண்டாராம்.

இச்சம்பவத்தில் ஊர்காவற்றுறை கடற்படைப் பிரிவைச் சேர்ந்த சிப்பாய்களான எஸ். விமலசேன, எஸ். விஜயரத்தின ஆகியோரே பலியாகினர்.

இத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் போது இடையில் சிக்கி ராஜபக்ஷ என்ற மற்றொரு கடற்படைச் சிப்பாய் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நேற்று இரண்டு கடற்படை அதிகாரிகள் உட்பட ஐந்து கடற்படையினர் சாட்சியமளித்ததுடன் மூன்று துப்பாக்கிகளும் பொலீஸாரினால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

இவ் வழக்கை ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்ற மேலதிகநீதிவான் விசாரணை செய்தார். மறு விசாரணை இம்மாதம் 22 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (5-6)

## பூவரசங் ..

(முதலாம் பக்கத் தொடர்)

கிழக்கு இணைப்பாளர் சிவநாதன் கிஷோர் மற்றும் திணைக்களத் தலைவர்கள் நேற்று நான்கு வாகனங்களில் இப்பாதை வழியாக துணுக்காய் சென்று மீண்டும் வவுனியா திரும்பினர்.

அதன் பின்னர் முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆஸ்பத்திரி அம்புலன்ஸ்கள் இப்பாதையால் நோயாளர்களை ஏற்றிக்கொண்டு வவுனியா ஆஸ்பத்திரிக்கு வந்தன.

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப்பகுதி மக்கள் இதுவரை நாளும் உயிலங்குளம் பாதை ஊடாகவே வவுனியாவுக்குப் போக்குவரத்துச் செய்ய அனுமதிக்கப்பட்டனர். பூவரசங்குளம் பாதை திறக்கப்பட்டதால் வவுனியாவுக்கான பயணத் தூரம் மூன்றில் ஒரு பங்காகக் குறைந்துள்ளது. (ஐ-9-21)

# வல்லைக் காவலரணில் கரவெட்டி இளைஞர் கைது!

கரவெட்டி இளைஞர் ஒருவர் வல்லைவெளி இராணுவக் காவலரணில் வைத்து சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமைகாலை யாழ்ப்பாணத்கிலிருந்து கரவெட்டி நோக்கிச் செல்லும் போதே இவர் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. தம்பிராசா கலைமகன் (24 வயது) என்பவரே கைது செய்யப்பட்டவராவார். இவர் தற்பொழுது காங்கேசன்துறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

## 60 கண்ணிகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

விடுதலைப் புலிகள் மோட்டார் தாக்குதல்களை நடத்தியதாகவும், படையினர் எதிர்த்தாக்குதல் நடத்தி அந்தத் தாக்குதலை முறியடித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

## மரணச்...

(முதலாம் பக்கத் தொடர்)

★ ஒருவரைக் கைது செய்தவுடன் அது தொடர்பான பற்றுச்சீட்டு வழங்கப்படாவிட்டால் சம்பந்தப்பட்ட அதிகாரி கைதியைப் பொலீஸில் ஒப்படைப்பதோடு பற்றுச் சீட்டையும் உடனடியாக வழங்க வேண்டும்.

★ இரவில் வீட்டில் தங்குவதற்கு வருகை தந்த தமிழர் தொடர்பாக தொலைபேசி மூலம் பொலீஸ் நிலையத்துக்குத் தகவல் வழங்க முடியும். எனினும் வீட்டு உரிமையாளர் மறுநாள் காலை பொலீஸ் நிலையத்துக்கு வருகை தந்து அதை முறைப்படி அறிவித்தல் வேண்டும்.

## முல்லையில்...

(முதலாம் பக்கத் தொடர்)

தப் போராட்டத்தில் பாடசாலை மாணவர்களும் கலந்து கொண்டனர்.

அதேசமயம்—

கிளிநொச்சி அரச செயலகம் முன்பாகவும் மக்கள் நேற்று அடையாள உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடத்தினர். இன்று மல்லாவியில் உள்ள அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் முன்பாகவும் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற உள்ளது. (ஐ-9)

## ஆங்கில தினம்

யாழ். புனித சாள்ஸ் மகா வித்தியாலய ஆங்கில தினம் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி முதல் வித்தியாலய மண்டபத்தில் அதிபர் திருமதி பி.எவ். சின்னத்துரை தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆங்கிலம்), டி.ஆர். அருமைநாயகம், அருட்தந்தை அகஸ்ரின், திருமதி ஞானபொன்ராஜா ஆகியோர் கலந்து கொள்வர். [ஐ]

## வைகோ...

(முதலாம் பக்கத் தொடர்)

செயலாளர் இல. கணேசன் நேற்று வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இக் கோரிக்கையை விடுத்தார்.

இலங்கையின் இனப்பிரச்சினை காரணமாக ஆயிரக்கணக்கான தமிழ் அகதிகள் இந்தியாவுக்கு வந்திருப்பதால் இது ஓர் உள்நாட்டுப் பிரச்சினை எனக்கூறி புறக்கணிக்க முடியாதுஎனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பிரதமர் முயற்சிகளை மேற் கொண்டால் தமிழக மக்கள் அதற்கு முழு ஆதரவு அளிப்பார்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சுக்களை ஆரம்பிக்க தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் விருப்பம் தெரிவித்திருப்பதை அடுத்தே தமிழ் நாட்டில் இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## காரைநகருக்கு..

[முதலாம் பக்கத் தொடர்]

யாழ்ப்பாணத்தில் இருந்து காரைநகர் செல்வோர் பொன்னாலைப் பாலம்வரை சென்று பின்னர் காரைநகரில் இருந்துவரும் மற்றொரு பஸ் மூலமே அப்பால் பயணம் செய்யும் நடைமுறை இதுவரை அமுலில் இருந்து வந்தது. இனிமேல் பயணிகள் ஒரு பஸ் மூலமே நேரடியாகக் காரைநகர் செல்லமுடியும். [ஐ-139]


# சிவநெறி கல்வி நிலையம்

[ஸ்ரான்லிக் கல்லூரிக்கு அருகில்]

## SPOKEN ENGLISH

**By: Mr. Britto**

ஆரம்பம்: 12 - 09 - 1998

சனி காலை 7-00 மணி

நேர அட்டவணை சனி, ஞாயிறு 7-00 — 8-00 மணி

(59006)



## 4 ஆவது புதிய பிரிவு

## SPOKEN ENGLISH

WITH

**GRAMMAR**

Lectures By: Mr. M. A. HARI

ஆரம்பம்: 12-09 1998 சனி காலை 10 மணி

Saturday / Sunday ] 10-00 A. m — 11-00 A. m

அனுமதிக்கு முந்திக் கொள்ளுங்கள்

DIRECTOR,

**HARY'S INSTITUTE,**

KONDAVIL EAST, KONDAVIL.

(58996)



## எமது ஒறிஜினல் வெளியீடுகள்!

★ புது வசந்தம்

★ காவல் நிலையம்

★ அதிகாரி

★ காவல்காரன்

★ மக்கள் ஆட்சி

✶ புதிய போஸ்டர்களும் விற்பனைக்குண்டு.

## வீடியோ விமல்

யாழ்ப்பாணம்.

(சி/4798)



## எமது ஒறிஜினல் வீடியோ CD வெளியீடுகள்!

★ என் ஆசைராசாவே

★ தாயின் மணிக்கொடி

ஓடியோ CD வெளியீடுகள்!

★ உறவுகள்

★ ஆட்டோக்காரன்

✶ புதிய படப் போஸ்டர்களும் விற்பனைக்கு உண்டு.


## சுப்பஸோ வீடியோ

யாழ்ப்பாணம்

(சி/4799)


# துறவற அர்ப்பணத்தின் பொன் விழா

08 — 09 — 48



08 — 09 — 98

அருள்திரு

## இம்மானுவேல் விஜயரத்தினம்

அ. ம. தி.

அமல அன்னையின் அருட்கனியே
துறவறத்தின் புகழ் குருமணியே
ஆன்மீக நெறியின இலக்கணமே
பொன் விழாக் காணும் நாயகனே
வாழ்க! வளர்க! நீடூழி காலம்
இறையருள் பெற்றே இயேசுவின் பாதம்.

பொன்விழா நன்றித் திருப்பலி கொழும்புத்துறை புனித வளனார் ஆலயத்தில் இன்று 08-09-98 காலை 11-30 மணிக்கு இடம்பெறும்.

ம. போல்நட்சத்திரம்
அ. ம. தி.

(59003)

# இராமகிருஷ்ணமிஷன் துறவிகளின் சங்கானை விஜயம்

இடம்: சங்கானை வெல்வில் முருகமூர்த்தி தேவஸ்தான வழிபடுவோர் சபை மண்டபம.

காலம்: 08-09-1998 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00 மணி

கலந்து கொள்பவர்கள்:

வணக்கத்துக்குரிய சுவாமி விருபக்ஷானந்தாஜி மகராஜ்
(இராமகிருஷ்ண மிஷன், செங்கல்பட்டு - சென்னை)

வணக்கத்துக்குரிய சுவாமி ஆத்மகணாநந்தாஜி மகராஜ்
(உப தலைவர், இராமகிருஷ்ண மிஷன், கொழும்பு)

வணக்கத்துக்குரிய சுவாமி அஜராத்மானந்தாஜி மகராஜ்
(இராமகிருஷ்ண மிஷன், மட்டக்களப்பு)

வணக்கத்துக்குரிய சுவாமி சித்ரூபானந்தா
(ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம், பருத்தித்துறை)

சங்கானை நிகரவைரவர் தேவஸ்தானத்தில் இடம்பெறும் ஆராதனையைத் தொடர்ந்து, ஊர்வலமாகச் சங்கானை வெல்வில் முருகமூர்த்தி தேவஸ்தான வழிபடுவோர் சபை மண்டபத்தை வந்தடைவார்கள்.

சொற்பொழிவுகளும் பஜனை வழிபாடுகளும் நடைபெறும் இவ்விழாவில் கலந்து ஆத்மீக ஈடேற்றம் பெற்று பயனடையுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வெல்வில் முருகமூர்த்தி தேவஸ்தான
வழிபடுவோர் சபையினர்
நிகரவைரவர் தேவஸ்தான
பரிபாலன சபையினர்,
சமூகசேவைகள் அமைப்பு,
சங்கானை.

(59028)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிரைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள [illegible] [illegible] 08-09-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org